ஸ்ரீ

A

ஸ்ரீராமஜெயம்.

பத்திராசல

# ஸ்ரீராமதாஸ் கீர்த்தனை.

குத்தனூர்

ஸ்ரீமான் - சின்னசாமிசாஸ்திரியார்

அவர்கள் இயற்றியதை

ஷை சாஸ்திரியாரவர்கள் சிஷ்யர்

திரிசிரபுரம்

இராஜகோபாலநாயுடு அவர்கள்

இயற்றிய

முகவுரையுடன்.

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1924.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீ...

POOMAGAL VILASUM PRESS

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# சாற்றுக்கவிகள்.

---

சென்னை சர்வகலாசாலை ஆந்த்ரப்ரதானபண்டிதர்

## ஸ்ரீரங்கம் - இர்ராமாநுஜஸூரி அவர்கள் இயற்றியது.

உத்பலமாலா விருத்தம்.

த்ராவிடபாஷனுக்கக்ருதி ரம்யதரம்புகசின்னஸாமிஸ
த்பாவஸமூஹசேகருடு பாவிதவிஷ்ணுபாதாரவிந்துடை
கோவிதலோகமெல்லகடு ஸூரிமிஸந்நுதியும்பலஜஸெனௌ
பூவிதிதாதிசக்திக்ருதி போடிமினொந்தமிதபூமினெல்லெடன.

ஸம்ஸ்க்ருத ஸ்லோகம்.

க்ருதிம்ப்ரகாசயாமாஸ த்ராவிடீம்ஸூரஸாகர
ஸூதாமிவமஹாஸத்வ சின்னஸாமிஸதீமணி.

---

ம-ா-ா-ஸ்ரீ,

வித்வான் திருநீர்மலை பரவஸ்து

## நம்பெருமாளையரவர்கள் இயற்றியது.

ஸீஸபத்தியம்.

ராமகதாஸதா ரஸமானமத்துடை
மதராத்திரினுண்டேகோ பன்னுமூனு
ஆதனுசாரித்திர மத்புதம்புகுத்த
னாரிஙிவாஸண்டு யூரியகடு
தீமந்துடகுசின்ன ஸாமிசாஸ்திரிவிண்புடு
த்ராவிடம்புனவிபு தபதுலெலமி
கொனியாடஸ்ரீயதீஸூனி சரிக்கிரமுதோட
ரசியிஞ்செபக்கினு ராமதாஸ
வருனிவ்ருத்தாந்த மெல்லபுவனமுனந்து
ப்ரசுரமொனரிஞ்செ தத்ஸத்பரபாவமெறிசி
ராமக்ருஷ்ணநாயுடு ரம்யசீலு
டமரனுசந்ரதாராகக்க கைசெலங்க.

---

புரசை அஷ்டாவதானம்

## சபாபதி முதலியாரவர்கள் இயற்றியது.

கழிநெடில் விருத்தம்.

இன்புறுபத்தி காரணமாக விறைவனையுளமிசை யிருத்தி
யன்புயர்முத்திக் கணியனுமிராம தாசன்தனருட் பெருஞ்சரிதை
மன்பதையுணர்வான் கீர்த்தனையாக வனைந்தனன் கச்சியம்பதிவாய்ப்
பொன்புனைமதில்சூழ் குத்தனூர்ச்சின்ன சாமியாம்பூசுரன் மாதோ.

---

சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

## கோ. இராஜகோபாலபிள்ளை அவர்கள் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சிரந்தருமூனுகர்மிக்கட் டேவுமெண்கட்
டேவுபோராயிரங்கட் டேவுமல்லார்
வரந்தருநான்மறைசுடுணி பரமன்செங்கண்
மாலென்னுமெய்ம்மையுளம் வலித்தேனோர்க்கும்
திரந்தருவான்றெரிக்கலுறு சின்னசாமித்
திருப்பெயர்பெருமான் ராமதாச
தரந்தருவான்சரிதங்கீர்த் தனமாவிங்குத்
தந்திட்டானங்கண்மனங் குவந்திட்டானே.

---

பிரபன்ன வித்துவான் காஞ்சீபுரம்

## இராமசாமிநாயுடு அவர்கள் இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பன்னுமறைமுடிப்பொருளைப் பத்தியென்னப்
பகர்வலையிலகப்படுத்த பான்மையாலே
யின்னலறுமுத்தியுற்ற ராமதாச
னெனும்புனிதன்சரிதைதனைக் குத்தனூர்க்குத்
தென்னமரவந்தசின்ன ஸாமிவிப்ரன்
தேசமர்கீர்த்தனத்தமைத்திச் செகத்தோர்காம
மன்னனைச்செற்றி ராமதாஸர்களாய்த்தூய
வைகுந்தமெய்துமா வழங்கினனே.

---

புரசை, அஷ்டாவதானம்
சபாபதிமுதலியாரவர்கள் மாணுக்கரும்
ப்ரீசர்ச்மிஷின் காலேஜ் தமிழ்தலைமைப்புலவரும் ஆகிய

## திரு - சின்னசாமிபிள்ளை அவர்கள் இயற்றியது.

எண்சீரடியாசிரிய விருத்தங்கள்.

மேருபுரிதவமகவாம் பத்ரசைல
  மீதுஜானகிவல்லி படரிராம
தாருவெழிலருட்கனியைக் கபீருதாசன்
  தன்னுரையாஞ்செந்நெறியே சென்றுதுய்க்குஞ்
சீருறுகோபன்னுவா மிராமதாசச்
  செம்மலினெண்சரிதமெளி தாணர்ந்துமுத்தி
தாரணியோருறும் வண்ணஞ்சின்னசாமி
  தாசனுடகத்தமிழாற் சாற்றினனல்.

விப்பிரர்தங்குலமணியாஞ் சின்னசாமி
  வித்தானைரைவரையு மறுவராக்கிச்
செப்பறுசீர்த்திருமாலின் சரிதமென்னுஞ்
  செழுந்தேனையன்பருக்குப் புகட்டுந்தூயோன்
ஒப்பில்புகழ்மேவுமெழி லிராமதாச
  னெண்சரிதந்தனைத்தமிழ்நா டகத்தமைத்தான்
இப்புவியோரீடேற விதயத்துன்னி
  யிவ்வரியவுதவிக்குங் கைம்மாறுண்டோ.

---

வித்துவான் காஞ்சீபுரம்

## இராமானுஜப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

எழுசீரடியாசிரிய விருத்தங்கள்.

உலகினிலுயிரி லுணர்வினிலுணர்த்து
  முத்தமாசிரியரி லியலில்
இலகுநீர்த்தெரிப்பா னவ்வப்பேர்நடுவ
  ணெழுத்தினை முறையுறவியற்றி
நலமுறுஞ்சின்னசாமிப் பேர்கொண்டெடந்
  நாளினுங்குத்தனு ருறைவோன்
அலகில்சீரிராம தாசர்தஞ்சரித
  மருளினனடியர் வாழ்வுறவே.

திருவளரிராம தாசர்தஞ்சரிதக்
 கீர்த்தனம் புவியினிற்றிகழ
மருவளர்கமல மாலைவேய்சின்ன
 சாமிமால் வகுத்தனனதனை
உருவளரிராமக் கிருட்டினனென்னு
 முத்தமனநுஞையாற் புரைதீர்
குருவளர்நிறமா ணிக்கவேளச்சிற்
 குதவுறவியற்றினன் மாதோ.

---

வித்துவான் திருமயிலை

## சண்முகம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

ஆசிரியச்சந்த விருத்தம்.

இருக்குலிவிருக்குமுதலாதலின் மற்றதனி
 னிரும்பொருளேமுழுமுதலென் றியம்பிடுமின்றிருநீர்ப்
பெருக்குமலியகிலமந்தப் பெருங்கருணைப்பிழம்பைப்
 பெரிதடையுங்கோபன்னுப் பிரபலகாதையினைச்
சருக்கரையுந்தீம்பாலுங் கைப்பச்செந்தமிழ்க்கீர்த்
 தனைவடிவாயெம்மனோர் தமக்கருளிச்செய்தான்
தருக்கண்மலிதருபொழில்சூழ்க் குத்தனூர்ச்சின்ன
 சாமியெனப்புலிபுகழந்தணர் குலமாமணியே.

---

# முகவுரை.

ஸ்ரீபக்தவத்ஸலனாகியும் ஸ்ரீபக்தபராதீனனாகியும் ஸ்ரீஸ்வயம்ப்ரகாச பரஞ்சோதிர்மய பரமாத்ம ஸ்வரூபியாகியும் ஸர்வலோகோஜ்ஜீவன பரமபுருஷார்த்த வேதவேதாந்தோபநிஷத்வாக்கிய பிரதிபாத்தியனாகியும் ஸத்வ ரஜஸ் தமோகுண சூன்யனாகியும் பிரகிருதி சம்பந்தமான இச்சத்வாதி குணத்ரயங்களுள்ள திரிமூர்த்திஸ்வரூபமாய் மாயா மோஹித சித்தர்களுக்குப் பிராந்தியினால் தோன்றுகின்றவனாகியும் சுத்த ஸாத்வீக விலக்ஷண க்ஞான ஸாதுசஜ்ஜன மனோரஞ்சன நிரதிசயானந்தமாகியும் தோன்றல் மறைதல் குவிதல் விரிதல் முதலிய விகாரமில்லாது தன்னிலேதானாயிருக்கின்ற பராபரவஸ்துவாகியும் நிஸ்ஸார அபார ஸம்ஸார பாராவாரக்கரையாகியும் ஸமானாதிகரஹிததுரையாகியும் தன்னிலும் வேறானதொன்றில்லாது தானெல்லாவற்றிற்கும் வேறானவனாகி அவாங்மானஸ கோசரனுமாகின்ற ஸ்ரீமந்நாராயணனென்னும் சக்கரவர்த்தித் திருமகன்.

“வைதேஹிஸஹிதம்ஸுரத்ருமதலே ஹைமேமஹாமண்டபே
மத்யேபுஷ்பகமாஸனேமணிமயே வீராஸனேஸுஸ்திதம்
அக்ரேவாசயதிப்ரபஞ்சன ஸுதேதத்வம்முனிப்ய பரம்
வியாக்யாந்தம்பிரதாதிபி பரிவ்ரதம் ராமம்பஜேஸ்யாமளம்.”

என்னும் ஸ்ரீமத் பரம ஹம்ஸபரிவ்ராஜகாசாரிய ஸ்ரீசங்கரபாத ஸ்வாமிகளாகிய ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் அருளிச்செய்த ஸ்ரீராம கர்ணாமிர்தாந்தர்க்கதமான இந்த ஸ்லோகதாத்பரியத்தின்படியே ஸ்ரீ வைகுண்டத்தில் திவ்விய திருமாமணிமண்டபத்தில் சீதாலக்ஷ்மண பரதஸத்ருக்ன ஸஹிதராயெழுந்தருளியிருக்க, இந்த ஸ்ரீராமபரப்பிரம்மமூர்த்தியின் சந்நிதியினுள்ள நித்ய முக்தர்களான முனீஸ்வரர்களின் பொருட்டு ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி பரதத்வத்தை வெளியிட்டுக்கொண்டிருக்குங்காலத்தில், ஸ்ரீபக்தவிஜயக்ரந்த பிரமாணானுஸாரமாய் இகலோகத்தில் பெருமைதங்கிய வனத்தில் அருமையுள்ள பிரம்மநிஷ்டையிலெழுந்தருளிய சகல ரிஷிகளும் சுவர்க்கலோகவாசிகளான தேவர்களுடன்சென்று, கற்பகவிருக்ஷநிழலில் வீற்றிருக்கும் ஸர்வோத்கிருஷ்டனாகிற ஸ்ரீ ஹரிபரந்தாமனை வலம்வந்து பணிந்து மனோவாக்கு காயங்களைத் தங்கள் வசப்படுத்தி, ஓ! ஆதி நடுமுடிவில்லாது ஆதிபுருஷனான ஸர்வஸ்வரூபியே! ப்ரவைகாந்திகள் தங்கள் உத்தம ஞானத்தினால் ஆஸ்ரயிக்கத்தக்க, அஷ்டாக்ஷரப்பிரதிபாத்யனான ஸ்ரீவாசுதேவனே! ஓ எங்கள் ஆராவமுதமே! உமக்குத் தெண்டன் சமர்ப்பிக்கின்றோம்; என்று வெகுவிதமாய் அந்தரங்கபக்தியாய் ஆனந்தாதிசயத்தோடு துதித்துத் தங்களைமறந்து சித்திரதீபம்போலசையாமல் நிற்க ஸ்ரீ எம்பெருமான் அவர்களை குளிரக்கடாக்ஷித்து; ஓ! ரிஷிகளே? தேவர்களே? உங்களுக்கு உற்றதுயாது? என்னிடத்தில் என்னபெறக்கருதி யிவண்வந்தீர்களோ? அதைச் சொல்லுங்களென்றும், இனியுங்கள் மனோசஞ்சலங்களை வெல்லுங்களென்றும் அருளிச்செய்யவே, சகலரும் அளவிலாச் சந்தோஷ

பரிதர்களாய் அலர்ந்த தங்கள் திவ்விய நேத்திர பங்கஜங்களில்நின்று ஆனந்தபாஷ்பங்கள் தாரைதாரையாய்ப்பெருகி, ஸ்ரீபகவத் திவ்விய சரண கமலங்களில் திருமஞ்சனநீர்போற்பரவ பரவஸ ஆநந்தஸாகாரமானர்களானதினால் சொற்கள்குழற,நமோ க்ஞானஸ்வரூபா! ஸ்ரீமந்நாராயணா! ஸ்ரீஜனதயாபாராயணா! நமோநமோ! அதிகாரணா! ஸர்வபரிபூரணா! நமோநமோ! ஹரீஹரீ! நரஹரீ! முரஹரி! என்னும் இத்யாதி ஸர்வமத ஸம்மத ஸ்ருதி வாக்கியங்களாகும் சுகந்த மலர்களால் அர்ச்சித்து நீர் சர்வவியாபகன்; உன்னிடத்தில் சர்வமும் நிற்கின்றது; அன்றியும் சர்வ வல்லவனும் நீயே; ஆதலால் சகலமுமறிகின்றாய். ஆகையால் யாது காரணத்தைப்பற்றி எங்களையிங்குவரும்படிச்செய்தீரோ; அதை முழுதும் நீயே அறிவாய். ஆதலால் நாங்கள் விண்ணப்பஞ்செய்வானேன். ஆயினும் நினது நியமனம் உல்லங்கனம் செய்யப்படாதாகையால் விண்ணப்பஞ்செய்கிறோமெனச் சொல்லத்தொடங்கினார்கள்.

ஓ! ஆபத்பாந்துவாகிய ஸ்ரீ ஹிருஷிகேசனே! பூலோகத்தில் ஞானமயமாகும் ஆத்மஸ்வரூபமே தாங்களென்றுணர்ந்து ஸ்ரீஅச்சுதனாகும் நின்னை யனுபவிக்கத்தக்க யோகநிலைக்கு யோக்யமான நிர்மலாந்தக்கரணமும் வேத சாஸ்திரங்களா லுணர்த்தப்பட்ட சதாசாரமுமுடைய ஜனங்களுக்கு கலிகாலமகத்துவத்தால் சுபாவத்திலுண்டாகத்தக்க ஜீவகாருண்யம் பொறுமை மனவூக்கம் ஐம்பொறியடக்கல்முதலிய நற்குணங்கள் குறைந்துபோயின. அதனால் பரிசுத்தமான ஹிருதயத்தில் ராகத்வேஷாதி தோஷங்களென்னும் புழுதிபடிய அவர்கள் பரலோகசாதகங்களான தான தவ யக்ஞ யாகாதி ஸத்கருமங்களின் பிரீதியற்றவராயினார். அதனால் மேகம் அற்பமான மழையைப்பொழியும்படி நேரிட்டது. அதனால் எல்லாப்பயிர்களும் செழித்து வளர்தல் தவிர்ந்தன. அதனால் எங்கும் பஞ்சமுதலிய பலவித துன்பங்களுண்டாக ஜனங்கள் பசிப்பிணியினாற் சோர்ந்தவர்களாய் ஒருவரையொருவர் விசுவசிக்காமல், கொலை களவு கள் காமம் குருநிந்தை என்னும் பஞ்சமாபாதகங்கள் முதலிய அக்கிரமச்செய்கைகளையே செய்துவருங்காலத்தில் ஜனித்தது யாசததசயும்கூடியது பிரிவையும் உலர்ந்தது தாவையும் பெறவேண்டியதாகையால் சூரியசந்திரவம்ச ராஜாக்கள் முதலிய பரிபூரணானுக்கிரகம்வைத்திருந்த சகல ராஜாக்களிடத்தினின்றும் தேஜோபலத் தைரிய வீரியாதி மகிமைகளெல்லாம் தூரமாய்ப்போயின. போகவே மிக்க கோபமும் கடினநெஞ்சமும் அதருமத்திற்பதிந்த மனமும் கொல்லுங்கையும் துராசாரமுமுடைய மிலேச்சர் முதலானவர்கள் ராஜ்யம்பெற்று அகங்காரமிகுதியால் எங்கும் மதயானைகளைப்போல் ஓடி தங்களைப்போன்ற தீயொழுக்கமுள்ளவர்களையேகூடி மண் பெண் பொன்னாசையென்னுங் கள்ளையுண்டுமதிமயங்கி இதுசெய்யத்தக்கது; இதுசெய்யத்தகாதது என்று பகுத்தறியும் விவேகசூன்யராய் ஆலயங்களை யிடித்தும் பட்டணகிராமங்களில் கொள்ளையடித்தும், துர்க்குணாபரணம்பூண்ட இவர்களுடைய பூர்வீகராகிய அநேகவரசர்கள் எவ்வித பாடுபட்டும் கூடக்கொண்டுபோகச் சக்தியற்றுத் தீராப்பொறியாய்விட்

டுப்போன க்ஷேத்திரங்களைத் தங்களுக்கும் தங்களுடைய மக்களுக்கும் வசப்படுத்திவைக்க வேண்டுமென்னுங் கவலை மனதிற் குடிகொள்ள சகோதராதி பந்துக்களையும் மற்ற நேயர்களையும் நிர்த்தாக்ஷண்யமாய்க் கொலைசெய்வதில் திறத்தினராயிருக்கின்றதைக்கண்டஜனங்கள் ஓகோ! இதென்னவிபரீதம்! குபீர்குபீரென்றெழும்பும் அனற்கொழுந்தோடுங் கூடிய அக்கினியானது தன்னிடத்திலுற்றவனைமாத்திரந் தகிக்கின்றது. இந்த அரசர்களாகிற அக்கினிக்குக்கோபம் ஜனித்தால் குரூரக்ருத்யங்களுக்காலயமாகிற சித்தத்தினையுடைய இஷ்டதுஷ்டஜனங்களாகிறகாற்றில்கூடி மாதா பிதா பிராத்ரு களத்ர புத்ர மித்ராதிகள் அத்தனையும் அழிகின்றதேயென்று சிந்தித்தவராய் அந்த அக்கினியைத் தணிக்கத் தாங்களும் அம்மிலேச்சவொழுக்கத்தையே கைக்கொண்டவராயினர்.

மேலும் இக்கொடியகாலத்தில் புருஷர்கள் விவேகமாகிய ஐஸ்வரியத்தினைற் பெறத்தக்கது. ஆத்மோஜ்ஜீவனமென்று சிறிதேனும் நினையாது நீர்மேலெழுத்தை நிகர்த்ரவ்யத்தைச் சிலையிலெழுத்தென்று கருதினவராய் உள்ளத்திலுள்ளமர்ந்து.

“அடாதகாரியஞ்செய்தால் படாதபாடுபடவேண்டும்.”

என்று தண்டோராவி னொலியைப்போல பரமகிருபா விசேஷத்தால் நீயறிவித்துவரச்செய்தும் முன்பின் எண்ணிப்பாராமல் பிறர்பிரயத்னங்களைக்கெடுத்தல், தீதுக்கு உதவிசெய்திடல், வழக்கோரமுரைத்தல் முதலிய அனியாயமார்க்க உதவியைக்கொண்டு தங்கள் காரியங்களை முடித்துப் பேராசையெனும் பைத்தியம்பிடித்து மேன்மேலும் பொருளையே யிச்சித்துவருகின்றனர். இவ்வாறு சம்பாதித்தபொருள் மற்ற காரியங்களுக்குப் பிரயோசனமாகாமல் தங்கள் தேசத்தைப் போஷிப்பதிலும் வெளிமயக்கேசெயும் பரத்தையர் விஷயத்திலும் வினியோகப்படுகின்றது.

ஸ்திரீகளோ சேற்றில்நாட்டிய கம்பம்போன்ற மனமுடையவர்களாய் ‘பர்த்தாவே கர்த்தா’ என்னும் பழையவார்த்தையைமறந்து பரபுருஷரையேயிச்சித்து விபசாரிகளாயிருக்கின்றனர். அன்றியும் சேதனசேதன ஸ்தூல சூக்ஷ்மங்களான ஸர்வ பிரபஞ்சங்களிலும் ஸர்வசாக்ஷியுள்ளும்புறம்பும் வியாபக்குல கலாநிரைஸ்வாமியாய் ஸர்வஸ்வாமியாகின்ற நின்னையாராதியாமல் மனுஷியகல்பிதசமயங்களாகிற அஞ்ஞானந்தகார குகைகளிற்பிரவேசித்தாலும், அதர்மம் செழித்து வளர்ந்து உலகத்தைப் பாபம் மூடிக்கொள்ள, மனம் நிலைக்காமல் மந்திரம் பலிக்காமல் எங்கள் தவம் பங்கப்பட்டு நின்திருவடிகளை சரணம்புகுந்து முறையிட்டுக்கொள்ளவந்தோமென்று மெலிந்து சொல்லிநிற்க, பக்தபரிபாலன பிரபுவாகும் ஸ்ரீ எம்பெருமான் தன்சன்னிதியில் பரதத்வத்தை வெளியிட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தியையும் வால்மீகர் வியாசர் முதலான மஹரிஷிகளையும் திருவனந்தாழ்வானையும் பார்த்தருளி இந்த நித்ய விபூதிவாசிகள் நித்யவஸ்துவாகிற நமது நித்ய சின்மயகுணானுபவத்

தால்நித்தியானந்தானுபவஞ்செய்துக்கொண்டிருக்கும்வாறு லீலாவிபூதியாகிற பூலோகத்தில் உண்மைநிலையறியாது மஹாமாயையென்னுங் கோடையினலே தபிக்கப்பட்டு அலைகின்ற ஜீவாத்மாக்கள் நம்மையடைந்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று திருவுளங்கொண்டிருக்கின்றோம். ஆகையால் நீங்கள் அப்பூலோகத்தில் அவதரித்து அஜ்ஜீவகோடிகளுக்குப் பேரின்பமென்னும் அளவிலாச் சாயையோடுங்கூடிய வேதநிச்சயதத்வார்த்தங்களென்னும் ஆலாவிருக்ஷங்கள் சூழ்ந்த அதிக குளிர்ச்சிபொருந்திய ரம்யமான தாமரைத் தடாகம்போன்ற விசிஷ்டாத்வைதசித்தாந்த ஸ்தாபகஞ்செய்தும் பக்தியோக மார்க்கத்தையும் சொரூபநிஷ்டையும் பிரமக்ஞானத்தையும் மாசறவிளங்கச்செய்து, அன்பு ஆசாரம் ஜீவகாருண்யம் சத்தி வாய்மை முதலியவைகளைத் தழைக்கும்படி செய்து பின்பு நமது பரமபதம்வந்து சேர்க்கடவீர்களென்று திருவாய்மலர்ந்தருள, சுவாமி நியமனப்படியே திருவனந்தாழ்வான் ஸ்ரீபெரும்பூதூரில் ஜகத்குருவாய் ஸ்ரீபாஷ்யகாரரென்றும், வேதவியாசா ஜெகந்நாதத்தில் ஜெயதேவஸ்வாமிகளென்றும், வால்மீகர் டில்லியில் துளசிதாசரென்றும், சுகர் காசியில் யோனிசம்பந்தராய் கபீர்தாசரென்றும், அனுமார் டாகூர்தேசத்தில் இராமதாஸசுவாமிகளென்றும், மற்றுஞ்சிலர் சில வேறுபட்டணங்களில் லோகோஜ்ஜீவனநிமித்தம் அவதரித்தார்கள்.

இப்படிப்பட்ட ஜீவன்முத்தர்களுடைய சரித்திரங்கள் போதஞானரோகத்தோடுவருந்துகின்ற ஜனங்களுக்கு ஞானரசம் ததும்புகின்ற பிரமானந்த தேவாமிர்தத்தைப் புகட்டி அவ்வியாதியைநீக்கி அழிவில்லாத சாயுச்சியமளித்தலால் மேற்சொல்லிய பிரமக்ஞானிகளுடைய சரித்திரங்களுள், சேஷாம்சபூதரான ஸ்ரீ உடையவர் சரித்திர பிரபாவமும், ஸ்ரீ ஆஞ்சனேயாம்ஸரான இராமதாஸசுவாமிகளுடைய சரித்திரவைபவமும், பகவத்பக்தியிலும் பாகவதத்திலும் சிறந்தும் மஹாயோகீந்தராகிய ஸ்ரீபரத்துவாசமுநிவனது கோத்திரத்தில் யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான். குத்தனூர்-சின்னசாமிசாஸ்திரியா ரவர்களால் இனிய தமிழ் சிறந்தசொற்களால் கீர்த்தனரூபமாக இயற்றப்பட்டிருக்கின்றன.

மேலும் இந்நூலாசிரியர் சகலரும் சகுணக்கியானத்தில் முன்னர் தேர்ந்து சம்சாரமென்னும் விருட்சத்திற்கு விதைகளாகிற நான் எமது உமதென்னும் பற்றுக்களினின்றும் பேர்ந்து பின்னர் நிர்க்குண தியானத்திற்பிரவேசித்ததிலே ஜீவகோடிகள் உஜ்ஜீவிக்கத்தக்க வழியென்று தெரிவிக்கப் புத்தி சித்தி விரத்தி முத்தியடைவதற்கு அந்தரங்கமான பகவத்பக்தியே எல்லாவழியிலும் லேசான வழியென்று ரூபிக்கவும் பக்தியே வடிவாகக்கொண்டு ஓர் பெரியவரால் பத்ராசல மஹாத்மியத்தையுணர்ந்து அக்கினியின்மீது திவ்ய திருமண்டபத்தில் கோபுராதிகளைக் கட்டுவித்தல் முதலான கைங்கரியங்களைச்செய்தும், திவ்ய தேசயாத்திரை செய்துக்கொண்டு பத்ராசல சமீபம்வந்த சர்வேந்தர நிக்ரக ஸதாப்ரமானந்தானுபவ ஸ்ரீசுகப்பிரம்மரிஷியாம்ஸரான ஸ்ரீகபீர்தாச

ரால் மனமொடுங்குமார்க்கம் உபதேசிக்கப் பெற்றுக்கொண்டும் ஸ்ரீ புருஷோத்தமரின் திவ்ய கல்யாணகுணங்களை ஆந்த்ர க்ரந்த சொற்களென்னுஞ் சுகந்த மலர்களாற்றொடுத்த கீர்த்தனாமாலைகளைத் தினந்தோறும் ஸ்ரீபத்ராசலேசனுக்கு மதுவுண்ணும் வண்டுகள்போலவே மொய்த்த ஆத்மகோடிகளுக்குப் பிரமாண புத்தியாகும் ஸ்ரீ எதிராஜாசாரியைப் போல திருமந்த்ராதி ரஹஸ்யார்த்தங்களை அநுக்கிரகித்தும் இந்த லீலா விபூதியில் கோபன்னா வென்னுந் திருநாமத்தோடுங்கூடி யெழுந்தருளி யிருந்த ஸ்ரீபத்ராசல ராமதாஸ்சுவாமிகளையே அத்தாக்ஷியானசாக்ஷி யாக யவதரித்து அவர்சரித்திரத்தைப் பகவத்ப்ரீதியர்த்தமாய்ச் செய்தருளினர்.

அன்றியும் இவர் இச்சரித்திரம் கீர்த்தனாரூபமாகையினால் கற்றவர்க்கேயன்றி, மற்றவர்க்கு எளிதில் புலப்படாதெனக்கருதி மத்யே மத்யே சிலவிருத்தங்களும் வசனங்களுஞ் சேர்த்துக் கீர்த்தனங்களுக்குள்ள சந்தர்ப்பானுசந்தர்ப்பத்தைத் தெரிவிக்கின்றனர். இக்கீர்த்தனங்கள் திஸ்ர மிஸ்ர கண்ட சங்கீர்ண தாள சகித ஸந்தர்ய ராகங்களோடுங்கூடியதாகையால் பாகவதற்கேயன்றிச் சங்கீதவித்வான்களுக்கும் அளவிலா மகிழ்ச்சியைத் தரத்தக்கதாயிருக்கின்றன.

இவ்வளவோ இச்சரித்திரப் பிரபாவம் அன்று. மற்றென்னெனின்: பதார்த்த ஞானமுணராது ஒழிக்கத்தக்கவைகளில் வீணாகவைத்த ஓர் மமதையினால் எண்ணாதுமெண்ணி எங்குந்திரிந்து கலங்குகின்றன. ஒவ்வொருவரும் இப்பத்தி யோகநூலிலுள்ள வேதமுடிவானது பாராயணத்தால் அநித்திய ப்ரபஞ்சத்திற் பற்றொழிந்து திவ்யமங்களமூர்த்தியை. திருமங்கையாழ்வாரைப்போல.

"வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தாற்
பெருந்துய ரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடி யிளையவர் தம்மோ
டவர்தருங் கலவியேகருதி
ஓடினேனோடி யுய்வதோர்பொருளா
லுணர்வெனும் பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டுகொண்டேன்
நாராயணா வென்னுநாமம்."

என்று அனலிலிட்ட வெண்ணெய்போற் கரைந்து ரூபமில்லாமலே ஒன்றும் பலவுமாய்த்தோற்றி எப்பொழுதும் மாறாத நிர்மலஸ்வரூபியாகியும் தனக்கு வேறோராதாரமில்லாது தான் சர்வ ஜகதாதாரபூத அபயஸ்தான காரணகர்த்தாவாகியும் சகலபாபக்ஷயகாமநேமியாகி சர்வ லோக சரண்யஸ்வாமியாகின்ற ஸ்ரீ தாரக பரப்பிரம்மமே நித்தியமாகிற பரவஸ்துவென்று கண்டுகொண்டு சாசுவத சுபானுபவஞ்செய்வார்களென்னின் இதன் மாட்சிமை யறியாக்குழந்தையாகிய என்னால் புகழ்ந்து சொல்லக்கூடியதோ.

இங்ஙனம்:

**திரிசிரபுரம் - இராஜகோபால்நாயுடு.**

ஸ்ரீ பத்ராசலம்.





ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீராமதாஸ்சரித்திரக்கீர்த்தனைகள்.

நான்முகம்.

விருத்தம்.

தராதலத்தவதரித்த ஜானகிமனங்களிக்க
நராவதாரஞ்செய்தோங்கும் ராகவமூர்த்தியென்னும்
புராதனப்பொருளைநம்பிப் பூமிசைமகிமைபெற்ற
இராமதாசன்கதைக்கோ ரெழிற்குருபதங்காப்பாமே.

௧. இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சதாசாரிய சரணம் சரணம்
சங்கார்ணவ தரணம்

அநுபல்லவி.

உதாரமுகுந்த பாதாரவிந்த
கதாரஸாநந்த சுதாரஸகந்த (சதா)

சரணங்கள்.

௧. திருபுவியகரணம் கவிகுலாபரணம்
அவித்தியாவரணம் குவியரவிகிரணம் (சதா)

௨. அகுணமெனவெறுக்கும் சகுணமெனப்பொறுக்கும்
தகுந்தகாதென்றிருக்கும் மிகுமிருளையறுக்கும் (சதா)

௩. தொந்தமிலாநாமி சந்ததாபிராமி
அந்தமுகதிசாமி இந்தச்சின்னசாமி (சதா)

## நூல்.

### பத்ராசலஸ்தலமஹத்வஸங்கிரஹம்.

ஸ்ரீமதமலகுணோபேதராயும் சகலபுராண வியாக்கியான வைகரீ சமேதராயும் நித்தியபூதருமாகிய சூதரைப்பார்த்து மௌனசீலராகிய சௌனகாதிமுனிகள், ஐயா! புராணவித்யாதரரே? பத்ராசல மஹாத்மியத்தை நன்றாகச் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச், சூத புராணிகர் ஓகோமுநிகளே! பிரம்ம ருத்திராதிகளாலும் சொல்லற்கரிய பத்ராசல மகிமையைச் சொல்ல என்னாலாகுமா; ஆகிலும் அறிந்தமட்டும் சொல்லுகிறேன் கேளுங்கள்: பூர்வத்தில் மேருபர்வதராஜன் தனது மனைவியோடு அதியுக்கிரமாய் வெகுகாலந் தவஞ்செய்யக் கமலபவன் அகங்களித்து இவன்முன்வந்து என்னவரம் வேணுமென்ன; பரமபாகவதசிகாமணியாகிய புத்திரன் தேவையென்று மேருபர்வதராசன் கேட்க, அப்படியேதந்து அரவிந்தபவன் அந்தரத்தானமடைய அநுக்கிரகப்படிக்கு மேருபர்வதராஜனது மனையாளிடத்தில் பத்திரனென்கிறபிள்ளை ஒருவன் பிறந்து பாலப்பருவத்திற்றானே குணங்களிற்சிறந்து ஞானபோகத்தைத்துறந்து இதர தேவதைகளையும் மறந்து ஆராவமுதமான ஸ்ரீராமமூர்த்தியை அகில லோக மாதாவென்னும் சீதாதேவியோடும் லட்சுமணரோடுங்கோரி கோதாவரிதீரத்தில் வெகுகாலந் தவஞ்செய்ய எம்பெருமான் சானகி சௌமித்திரசகிதராய் பிரத்தியட்சமாகவந்து தரிசனந்தந்து என்னவரம்வேணுமென்றீ கேட்டருள தங்கள் திருவடியே வேண்டுமென்று அவன்கேட்க, பகவான் எனது தரிசனம் போகத்தைக் கொடாமல் ஆதியிலேயே மோட்சத்தைக் கொடாதாகையால் நீயிவ்விடத்தில் உனதுபேருள்ள பர்வதமாகி எங்களுடைய அர்ச்சாரூபங்களை சிரசாகத் தரித்துக்கொண்டு அடியார்கள் செய்யும் அலங்காரப் பிரதட்சண வந்தன ஸ்தோத்திராதிகளையுங் கொண்டு பிரம்மபிரளயம்வரையில் ஆமோதித்துக்கொண்டிருந்தகாலத்தில் என்னிடத்தில் ஐக்கியமடைவாயென்று ஜகதீசனருள, அவன் அப்படியே பத்ராசலமாக அவனது சிகரத்தில் திவ்யாலயத்தில் சீதாலட்சுமண சமேதராய் ஸ்ரீராமமூர்த்தி அர்ச்சாரூபியாய் எழுந்தருளி, அத்யாபியெல்லவர்க்கும் தரிசனந்தந்துகொண்டிருக்கிறாரென்று எனது ஆசிரியரான வேதவியாசபகவானால் கேட்டபடிக்குத் தங்களிடத்தில் விஞ்ஞாபனஞ்செய்தேன். கேட்டீர்களோ சௌனகாதிகளே! என்று சூதபுராணிகர் அருளிச்செய்ததாக பிரமாண்டபுராணம் உத்தரகாண்டத்தில் ஸ்தலமகிமாநுவர்ணன பிரகணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

விருத்தம்.

கோதாவரிதீரந் தனிலத்தியந்த
  கோமளமாகிய பத்ராசலத்தில்வாழும்
சீதாலட்சுமண பாதசத்துருக்கன்
  சேவிதனாய்விளங்குந் தேவாதிதேவன்

பாதாரவிந்தங்களிற் பக்திசெய்து
பார்மிசைவாழ்வதற்கும் பரஞ்சேர்வதற்கும்
ஆதாரமவன்றுளென் றெண்ணிநின்று
யடுத்திட்டார்வாசமங்கு தொடுத்திட்டாரே.

உ. இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுயோகிபகவது பயோகிகியோகி
சுகிருதபாகி யாகியிருந்தார்

அநுபல்லவி.

பயோநிதியைவிட் டயோத்திவந்த
பத்ராசலராம பக்தனையுகந்த (சுயோ)

சரணங்கள்.

ராயசத்திலிருந்து காயசம்ரக்ஷணம்
ஞாயமாய்ச்செய் துமு பாயமாய்லக்ஷணம்
பாயசரூபநாம பாகுநல்லபட்சணம்
பரசுகந்தருமென்று பக்திசெய்யத்தக்ஷணம்

தோயஜநேத்திர னருமருளாலே
சுபகரராகி யொருக்காலே
மாயமின்றிநல் வழியின்மேலே
வாஞ்சைகொண்டு தொண்டுருவம்போலே

ஹேயமதாகிய காய்ஜபாதையைவெல்ல
நேயமதாரகு நாயகநாமஞ்சொல்ல
தூயசின்னசாமி போலநல்ல(சுயோ)

வசனம்.

இவ்விதமாகப் பத்ராசலத்தில் தாலூகா கச்சேரியில் இராயச உத்தியோகத்திலிருந்த கோபன்னவானவர் பன்னிரண்டத்தியாயமுள்ள பத்ராசல ஸ்தல மகாத்மிய கிரந்தத்தைக்கண்டு பரமானந்தங்கொண்டு தாசில்தாரன் முதலான பெருந்த உத்தியோகஸ்தர்களிடம் இந்தப் பெருமையைவிண்டு மாதந்தோறும் அவரவர்கள் இவ்வளவென்று கொடுக்கும்படிச் சந்தா யேற்படுத்திக்கொண்டு அவர்களைக்கொண்டு அந்ததாலூகாவைச்சேர்ந்த பெருத்தகுடித்தனக்காரர்களுக்குஞ் சந்தா யேற்படுத்திப் பிரதிமாதம் பணத்தைத் தானே தண்டிப் பத்ராசலத்தின்மீது மரம் செடி கொடி மூடியிருந்த சந்நிதியில் மராமத்துசெய்து சம்புரோக்ஷணம்பண்ணி மலையேறி யிறங்குவதற்கு மார்க்கத்தை யேற்படுத்திப் பகவதாராதனநிமித்தம் ஒரு ஸ்ரீவைஷ்ணவரை யேற்படுத்தி நித்தியபூஜை நடந்துக்கொண்டுவரக் கண்டு அண்டுகொள்ளாத சந்தோஷம் பூண்டு இராமதாஸர் பகவானைத்துதித்தல்.



௯. இ-ம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்நாளு மறவேனே
இனிநானிங்கு பிறவேனே

அநுபல்லவி.

அந்நாளாதிமூலமே யென்னை
யாளென்றுனை கூவ ஆண்டவனேயுன்னை (எந்நா)

சரணங்கள்.

௧. இடையையும்பொன் னுடையையுமெழிற்
றுடையையும்நல்ல நடையையுந்திவ்ய
படையையும்முத்துக் குடையையுமென்றுந்
தடையில்லாத கொடையையும்
கடைவிழியுடை வாளழகையும்
விடைபெறுமத வேளழகையும்
தொடைமருவிய தோளழகையும்
சடையனும்பணி தாளழகையும்
அடைந்திடும்படி யாரையுந்தான்
புடைதங்கிய பேரையும்நான் (எந்நா)

௨. ஹாரத்தையும் நற்கோடீரத்தையும்
அலங்காரத்தையும் மஹாவீரத்தையும்
மேருதீரத்தையும் மிகுசூரத்தையும்
வரோதாரத்தையும் கெம்பீரத்தையும்
தாரகமந்திர சுகத்தையும்
சாரஸபதகர சுகத்தையும்
நீரஜநேத்திர சுகத்தையும்
சேரவரும்பர சுகத்தையும்
பூரணமாம கத்துவத்தையும்
காரணகாரண தத்துவத்தையும் (எந்நா)

௩. தலத்தையும் இந்தநிலத்தையும்
பத்ராசலத்தையும் இதன்பிலத்தையும்
ரவிகுலத்தையும் தேஜோபலத்தையும்
நதிஜலத்தையும் நிர்மலத்தையும்
பலவிதமாந் திருநாளையும்
வலதுகரந் தருநாளையும்
புலன்வசமாய் வருநாளையும்
பலனுண்டாம் பெருநாளையும்
அலர்கிலாகுணகண சிந்தனை
நலமிகுசின்னசாமிதொழு முந்தனை (எந்நா)

வசனம்.

இந்தப்பிரகாரமிருக்குநாளையில் டில்லியைச்சேர்ந்த ஹைதராபாத் தானேஷாவென்னும் பாட்சாவானவன் தனதிராஜஸ்ரீயத்தைச் சேர்ந்த தாலூகாக்களை குடிகளினது சம்மதியின்மீது அனேகம்பெயர்களுக்குச் சுபாவாகக்கொடுத்ததுபோலப் பத்ராசலதாலூக்கா குடிகளை வரவழைத்துக் கேட்கும்போது, கோபன்னபேருக்கு சுபாவாகக்கொடுப்பதே தங்களுக்குச் சம்மதமென்று சொல்லக்கேட்டு, அப்படியே இராமதாஸரை வரவழைத்து ஜாரிதாகீதும் கொடுக்கப் பெற்றுக்கொண்டு பாட்சாவை நோக்கி வருடத்திற்குப் பதினாயிரம் வராகன்விதம் பன்னிரண்டுவருடம்சேர்த்துப் பதின்மூன்றாவது வருடமுதலில் மொத்தம் இலக்ஷத்திருபதினாயிரம் வராகனையும் ஒரேதேதியிற் செலுத்துகிறேனென்று வணங்கிக்கேட்க, தானேஷா அப்படியே சரியென்று உத்தரங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு பத்ராசலம் வந்துசேர்ந்து சீதா லட்சுமண பரத சத்துருக்கன் அனுமத்சமேதரா யெழுந்தருளியிருக்கும் வேதண்ட சுதண்டாய பாகுதண்ட சாக்ஷாத் கோதண்ட தீக்ஷாகுருவின் ஆலயகைங்கரியத்தை விசேஷமாய் நிறைவேற்றி நித்தியோற்சவம் வாரோற்சவம் பக்ஷோற்சவம் மாசோற்சவம் ருதோற்சவம் அயனோற்சவம் பிர்ம்மோற்சவங்களெல்லாம் நடத்திக்கொண்டுவரக்கண்டு இஷ்டஜனங்கள் சர்க்கார்பணத்தை இப்படிசெலவுசெய்தால் பின்பு வருத்தம் நேரிடுமேயென்று சொல்லும்போது பன்னிரண்டுவருடம் நாமிருப்பதென்ன நிச்சயமென்று சொல்லிக்கொண்டு தன்னிடமிருக்கும் உத்தியோகஸ்தரையெல்லாம் சம்பளதாமாஷாபிரகாரம் ஸ்ரீராமஜெயம் எழுதும்படி செய்துக்கொண்டு யிருக்கையில் பத்ராசலத்திற்குச் சுமார் மூன்றுகாதவழி தூரத்திலிருக்கும் நாராயணபுரமென்னும்கிராமத்தில் ஒரு யோகிபிராமணன் உத்தமகுணச் சம்பன்னையாயும் உத்தமவதியாயுமிருக்கும் தனது கன்னிகையை யிவருக்குக் கொடுக்கிறதாக நிச்சயித்து முகூர்த்த தினத்தையும் ஏற்படுத்திக் கலியாணப்பத்திரிகை யனுப்பக்கண்டு சர்வாச்சிரமங்களுக்கும் ஆதாரமான நல்லற மில்லறமென்று அளவற்ற வஸ்துக்களையுஞ் சேகரஞ்செய்துக்கொண்டு அநேகம் பிராமணர்கள் சுயம்பாகிகள் பரிசாரகர்கள் சேவகர்கள் வண்டிகளுடன் புறப்பட்டு மார்க்கத்திற்போகக் கணவாய்ப்பிரதேசத்திலிறங்கின முன் நடந்த பிராமணர்கள் சாயங்காலம் சுமார் நாலுமணிகாலத்தில் இவர் சுபேதாராகையாலும் கலியாணநிமித்தம் வருகிற சமயமாகையாலும் பொருள் விசேஷமாயிருக்கும் அபகரித்துக்கொண்டு போகலாமென்கிற துர் அபிப்பிராயங்கொண்டு அங்குவந்து கும்புகூடிக்கொண்டிருந்த சுமார் இருநூறுபேர் திருடரைக்கண்டு பயந்து கையிலிருந்த சொம்பு மடி சஞ்சி பஞ்சபாத்திரம் உத்தரணிமுதலானவைகளை நழுகவிட்டுக் கண்ணீரொழுகவிட்டு எதிர்கொண்டு ஓடிவந்து சேதியைச் சொல்லக்கேட்டு இராமதாஸர் புன்னகைகொண்டு அபயந்தந்து சர்வபய நிவாரகனான சர்வேசுவரனைத் துதித்தல்.



## ச. இ-ம்-பரிசு-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

காக்கவரவேணும்-ராமா-வலக்
கைதரவேணும்-ராமா

### அநுபல்லவி.

ஆக்கலளித்த லழிதற்குமாதாரம்
ஆனவனேமுன்பின் னருகிலின்னேரம் (காக்க)

### சரணங்கள்.

க. கும்பினுளுள்ளம் வெதும்புவதைக்கண்டு
தம்பியும்நீயும்வில் லம்பிரண்டுங்கொண்டு (காக்க)

உ. நாவலர்பாவலர் ஆவலாய்வருந்தும்
கேவலனேயென்றும் காவலாயிருந்தும் (காக்க)

ந. கருடபகவா னிருதிருத்தோளே
மருவிதிருடர் நெருங்குமிவ்வேளே (காக்க)

ச. அடியேனென்றெண்ணி யருள்மழைபெய்து
நொடியிலரிகள் றாங்கியோடச்செய்து (காக்க)

ரு. தும்பிமுகன்குக னம்பிகையன்பாயே
தம்பிரானென்றிடும் எம்பிரானேநீயே (காக்க)

சு. வேதனோடுபூத நாதனுள்ளப்போது
பாதனேயாநந்த போதனேயிப்போது (காக்க)

எ. சாமான்யதெய்வ சங்கத்துக்காளல்ல
சீமானேசோதனை செய்திடும்நாளல்ல (காக்க)

அ. வணக்கமாயோதும் வார்த்தைதட்டாமல்
இணக்கத்தையறிந் தென்னைக்கைவிடாமல் (காக்க)

கூ. ஆதிமூலமென்னும் ஆனைக்கபயம்
சாதித்தபடிக்குச் சாதிக்கச்சமயம் (காக்க)

க0. பாஞ்சாலிக்கும் அபயந்தந்தவேக
வாஞ்சையோடுகனை வாயிலென்முன்னாக (காக்க)

கக. குணத்தைக்கொண்டாடும் கொத்தடிமையென்று
மணம்நிறைவேறும் வண்ணம்முன்னின்று (காக்க)

கஉ. சத்தியவுருதனைத் தாங்கியொருக்காலே
வெற்றிபெற்ற வித்தகனேயதுபோலே (காக்க)

கந. மந்தரமேந்தி யருந்தவமுதம்
தந்தப்படி யுகந்துசந்ததம் (காக்க)

கச. கிடியாகியொரு கடியாலேபகை
மடியகை யடித்திட்டவகை (காக்க)

௧௫. நரசிங்கனாகி யிரணியனைக்கொன்று
சுரரன்பர் துன்பந் தொலைத்தோனேயின்று (காக்க)

௧௬. வாமனனாகி மாபலியடங்கி
க்ஷேமம்பெறச்செய்த சீரருட்டொடங்கி (காக்க)

௧௭. கார்த்தவீரனையுங் கண்டித்துப்பூமி
தீர்த்தங்காசிபனைச் சேரச்செய்தஸ்வாமி (காக்க)

௧௮. சத்துருவாகிய பத்துமுகத்தானைக்
கொத்துடனேகொன்ற கோனேயடியேனைக் (காக்க)

௧௯. விபீஷணன்சுக்ரீபன் விண்ணோருங்களித்துப்
பாடப்பெற்றோனே பராநந்தமளித்துக் (காக்க)

௨௦. வஞ்சகனாகிய கஞ்சனையும்முந்து
துஞ்சச்செய்தநிஷ்பிர பஞ்சவரந்தந்து (காக்க)

௨௧. வம்பாடும்ராட்சதன் வணங்கச்செய்தங்கே
நம்பாடுவானை ரட்சித்ததுபோலிங்கே (காக்க)

௨௨. பண்டுஜகந்நாத பார்த்திவேசனஞ்சம்
உண்டும்வாழச்செய்த உனதடிதஞ்சம் (காக்க)

௨௩. தொடருமிடர்கள் தொலையப்பொடித்துப்
படருஞ்சோரரைப்,, பறக்கவடித்துக் (காக்க)

௨௪. ஆடகம்வருமென் றாசையினாற்சுற்றிக்
கூடவந்தோரையுங் கோபன்னனைப்பற்றிக் (காக்க)

௨௫. என்னமோசொன்னானென் றெண்ணாமலேர்த்துச்
சின்னசாமிபோலே யென்னையும்பார்த்துக் (காக்க)

வசனம்.

இந்தவிவரமாகச் சர்வேசுவரனைத் துதித்துக்கொண்டு தீரமாய்க் கணவாய்ப் பிரதேசத்திலிறங்கும்போது மத்தியில் வரப்பட்ட கோயிலாழ்வான் ரொக்கம் நகை நட்டு வேஷ்டி சேலை முதலியவைகளுள்ள வண்டியின் இரண்டுபக்கத்திலும் இரண்டு வெள்ளைக் குதிரைகளின் மீது இரண்டு சூரர்களாய்க் கட்கபாணிகளாயும் மற்றச் சாமான்வண்டிகள் பரிசனங்களின் இருபுறமும் துப்பாக்கிகளை பார்பண்ணிக்கொண்டு சிபாயிகள் இரண்டாயிரம்பேர்களாயும் ஜகதீசன் ரூபிகரித்து அந்தத் திருடர்களுக்குமாத்திரம் மூன்றுதரம் மறைந்து மறைந்து தரிசனங் கொடுக்கக்கண்டு அவர்கள் கோபன்னா பரமபாகவதனே என்று நினைத்து எல்லாரு மிவருடைய பாதாரவிந்தங்களில் தண்டம் சமர்ப்பித்து அஞ்சலியஸ்தர்களாய் சேதியைச் சொல்லக்கேட்டு உங்களுக்கு எம்பெருமானுடைய திவ்யசேவை கிடைத்தபடியால் நீங்களே பரமபாகவதோத்தமர்களென்று சொல்லிச் சேவித்து அந்தச் சேவை தனக்குக் கிடைக்கவில்லையே யென்று உருகி எம்பெருமானைத் துதித்தல்.

ரு. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-அடதாளம்.

பல்லவி.

நாராயணு நதஜன
பாராயணு

அநுபல்லவி.

பாராய்நீராய் பாசிக்கால்விண்ணுகி
காராகிக்கரணங்க ளானமகாயோகி (நாரா)

சரணங்கள்.

க. ஆராயுமறிவினுக் கறிவாகிப்பெருக்கும்
சீராயன்பர்கள் சித்தத்தினிலிருக்கும் (நாரா)

உ. பஞ்சதன்மாத்திரமாய்ப் பரவிப்பஞ்சகோச
ரஞ்சகனுகியெங்கும் ரமிக்கும்ஜகதீச (நாரா)

ங. ஒருபதந்நா னுலகந்தாங்கும்
திரிபதத்திவி திகழ்ந்தேதாங்கும் (நாரா)

ச. பூரணப் பூரணஞான
காரணக் காரணனுன (நாரா)

ரு. விதியுமப்பதி நிதிபதியுமதி
கதிர்பசுபதியுந் துதிஸ்ரீபதி (நாரா)

சு. நாராதீசுவர சிராதீசுவர
பராதீசுவர பராத்பரதர (நாரா)

எ. நித்தமுமித் தகைபார்க்கும்
பத்தனைச்சுத்தனென் றேர்க்கும் (நாரா)

பூதமய வேதமயவாதி
நாதமய கீதமயஜாதி
பேதமய மோதுபயபூதி
போதமய பாதநற்சோதி
பொன்னடியைத் தன்னகத்திலணைத்திடும்
சின்னசாமியைச் சேர்த்தணைத்திடும் (நாரா)

வசனம்.

இவ்வகைச் செவ்வையாய் அய்யனிடம் மனம்பதித்து மதித்துத் துதித்தும் வராதிருக்கையில் தீராக்கலக்கங்கொண்டு கண்ணீர் ஆறுகப்பெருக மயிர்க்கூச்சலிட்டுத் தனது அன்பின் உறுதியால் விநய நிஷ்டே யுக்தமாகப் பகவானைத் துதித்தல்.

௬. இ-ம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னம்பராமுகமா ராமா
இதிவுனக்குச் சுகமா

அநுபல்லவி.

பன்னகபூஷணனும் பரகாரியும்போதில்
துன்னவனும்பணியும் துரையேயென்மீதில் (இன்)

சரணங்கள்.

௧. சினமிராஜஸத்தையும் சேராமற்சோராமல்
மனமுன்னிடம்நிலைக்க வரந்தரவாராமல் (இன்)

௨. பின்னமதியின்வேரைப் பேர்த்தெறிந்துய்யாமல்
உன்னதசந்தோஷம் உண்டாகச்செய்யாமல் (இன்)

௩. என்னத்துதித்தாலும் என்வார்த்தையேராமல்
சின்னசாமியென்று சிந்தித்துப்பாராமல் (இன்)

வசனம்.

இவ்வண்ணம் துதிக்கும்போதெல்லாருங்கேட்க, ஆகாசவாணியைக் கொண்டு பின்பு தரிசனங்கொடுப்பேனென்று எம்பெருமான் அருள, வினவி சந்தோஷமடைந்திருந்த கோபன்னவை நோக்கி அந்தத் திருடர்கள் ஐயா! நீர் பரம பாகவத சிகாமணியாகையால் நாங்கள் இது வரையில் களவுசெய்து இவ்விடத்தில் புதைத்து வைத்திருக்கும் பொருளை ஸ்ரீ ராமார்ப்பணமாய் உமக்குக்கொடுக்கநிச்சயித்தோம் ஆகையால் அடியேங்கள்மீது தயைசெய்து ஸ்வீகரிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கும்போது கோபன்ன அங்கீகரிக்க, அந்தக்ஷணத்தில் அவர்கள் பொருளையெல்லாங் கொண்டுவந்து சமர்ப்பித்து வணங்கக்கண்டு பரிபூரண அனுக்கிரகஞ்செய்து அனுப்பிவிட்டுத் தனது பரிவாரத்துடன் நாராயணபுரஞ்சென்று மகோற்சவமாகத் திருக்கலியாணத்தை நிறைவேற்றிக்கொண்டு பத்ராசலம் வந்துசேர்ந்து தினந்தோறும் தெலுங்கில் தானே ஸ்ரீ ராமபரமாய் அநேக கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு தினந்தோறும் தனது திருமாளிகையில் பக்தஜனங்களுடன் தம்பூரு மிருதங்க தாள சகிதமாய் பஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில், கார்த்திகைமாசம் பானுவார தினத்தில் வனபோஜனஞ்செய்ய எத்தனித்து நானாவித சம்பாரங்களைச் சேகரஞ்செய்துக்கொண்டு கோதாவரிதீரவனத்திலிருக்கும் மண்டபத்தில் எம்பெருமானை ஏளனம்பண்ணி ஆராதித்து அநேக தீபாராதனஞ்செய்து தானும் போசனம்பண்ணிப் பாகவத கோஷ்டிகளுடன்கூடிப் பகவத்கதா சல்லாபஞ்செய்துக்கொண்டிருக்கையில் எதிரிச்சையாய் காசியிலிருந்து மகா பாகவதோத்தமராகிய கபீர்தாசர் பத்தினி புத்திர பக்தஜனங்களுடன் திவ்ய தேச யாத்திரை செய்துக்கொண்டு இந்த வனத்தில் சிலதூரத்தில் வந்திறங்

கிப் பகவன்னாமசங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அந்த மங்களத்தொனியைக்கேட்டு யாரோ பாகவதர்கள் வந்திருக்கிறார்களென்று அறிந்துக்கொண்டு தனது கோஷ்டியுடன் அங்குசென்று அருகிருந்த பெயரால் கபீர்தாசரென்று அறிந்துக்கொண்டு அவரிடத்தில் தான் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கொண்டிருந்த கோரிக்கை ஈடேறும்படியான நற்காலம் உதயமாச்சுதென்று மனங்களித்து அவரைத் துதித்தல்.

௭. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கபீர்தாசர்நீரே கடைத்
தேறும்வகைசொல்வீரே

அநுபல்லவி.

அபீதராயடுத்தவர் நிலைக்கப்புரியும்
அருள்பெற்றவரென்பதற் கட்டியுமுண்டோதெரியும் (கபீர்)

சரணங்கள்.

௧. நதிஜலத்தின்மீதுநடக்கிறவித்தையும்மைநண்ணும்போது
அதிகஞானிநீரன்றோ பாரும்பாரும்
அடியேன்பாக்கிய மகப்பட்டீர்வாரும்வாரும் (கபீர்)

௨. சாதுசேர்வை துர்லபம் தாசாதியின் துகருணைசுபம்
ஈதுசந்தேகமில்லை யினியெனக்கிடார்
இப்படிக்கொத்தவும்மை யெவர்தான்தேடார் (கபீர்)

௩. ஆமையடக்கும்வகைபோல் ஐந்திந்திரியங்களையடக்கியதால்
சீமையிலுமக்கீடு தேடினுங்கிடையாது
சின்னசாமியே யென்னுரைதப்பாது (கபீர்)

விருத்தம்.

மனமகிழ்ந் தன்புகூர்ந்து வணங்கியே ராமதாசர்
கனகபீர் வதனம்நோக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு
வனத்தினி லடியாரோடு வந்தகாரிய மென்னென்றே
வினவிப்பின் னிடரையெல்லாம் வெல்லுவான் சொல்லுவானே.

௮. இ-ம்-ஸ்ரீராகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உபாயஞ்சொல்லவேணும்
ஒடுமனதடங்கிநானும்

அநுபல்லவி.

அபாயங்களை யளிக்கத்தோணும்
அவிந்தையையொழித் தையனைக்காணும் (உபா)

சரணங்கள்.

க. கோரக்கனையென்றுமுந்த குருவாகியராமாநந்த
தீரனதுபயமுஞ்சிந்தச் செய்துபாதாரவிந்த
சாரமறிந்தவன்தந்த தாரகமந்திரஞ்சொந்த
சீரமுதமென்றுகந்த சின்னசாமியேயிந்த
பூரணஞானம்வந்த காரணங்களொடந்த (உபா)

விருத்தம்.

இந்தவகை கோபன்ன னடியிற்சேவித்
  தியம்புமுரை வினவிக்கபீ ரென்பானையா
எந்தப்பொருளு மிராம மயந்தானென்றும்
  இவனன்றி யோரணுவு மசையாதென்றும்
உந்தனுக்கு ளொன்றாகப் பார்க்கமேதை
  உண்டாகி யூர்ஜிதமா மனமொடுங்கும்
பந்தமெல்லாம் பறந்தோடு மிதுவேமார்க்கம்
  பாரென்றான் பின்புனக்கீ டாரென்றானே.

வசனம்.

பரம பாகவதோத்தமராகிய கபீர்தாசர் உபதேசிக்கப் பெற்றுக் கொண்ட கோபன்ன அந்தக் கபீரை மறுபடியும் வணங்கித் தேவரீருக்குப் பகவத்சாந்நித்தியமுண்டென்று கேள்வியாகையால் அடியேனுக்கும் பகவத் தரிசனங் கிடைக்கச்செய்ய வேண்டுமென்று வெகுவாய்ப் பிரார்த்திக்கக் கபீர்தாஸர் மனமிறங்கிக் கிருபைகூர்ந்து நாளைய தினம் பனிரண்டுமணிக்குச் சுவாமியை உமதிடம் அனுப்பிவைக்கிறேனென்று அருளிச்செய்ய விடைபெற்றுக்கொண்டு அவருக்கு வேண்டியசாமக்கிரியைகளை அபரிமிதமாய் வரவழைத்துக்கொடுத்துத் தனது திருமாளிகை வந்துசேர்ந்து மறுநாளும் அந்தவனமண்டபத்தில் எம்பெருமானை எழுந்தருளச்செய்து அனேக தீபாராதனார்த்தம் சால்யன்னசாக்குப் பக்ஷ்ய லேஹ்ய சோஷ்ய ததிட்சீரகிருதாதிகளையும் சித்தம்பண்ணிப் பகவதாகமனார்த்தம் புஷ்பமண்டப கஸ்தூரி குங்குமம் கற்பூரம் ஹிம்சல மிளித கந்த புஷ்பஹார சதமூஹார முக்தாஹார பீதாம்பராதிகளையும் சித்தம்பண்ணிப் பிரமாண போசனநிமித்தம் இலைகளைப் பந்திபந்தியாய்ப் பரிமாறி அன்னாதிகளையும் பரிமாறிக்கொண்டிருக்க, அந்தவேளையில் கபீர்தாசர் பகவானைப்பிரார்த்திக்கப் பிரத்தியட்சமாய் வரக்கண்டு அடியேன் கோபன்னவுக்குவாக் தத்தம்செய்தபடி இப்போது அவருக்குத் தரிசனங்கொடுத்து வரவேண்டுமென்று விக்கியாபானம் செய்யக்கேட்டு எம்பெருமானனவனுக்குச் சர்வசமக்கியானமில்லையே அங்கெனைப் போகச்சொல்வது சரியோவென் றருளக்கேட்டு அடியேனைப்பற்றி அவசியம் போய்வர வேண்டுமென்று கபீர்தாசர் சொல்லக்கேட்டு பகவான் மகிஷரூபியாய் சேற்றில்வீழ்ந்து புரண்டெழுந்து அதிவேகமாய் கொம்மாளமடித்துக்கொண்டு ஓடிவந்து இலை

களில் பரிமாறியிருந்த வஸ்துக்களையும் யாகசாலையிலிருந்த வஸ்துக்களையும் மிதித்துவைத்து அங்கேயேவளைந்தோடிருக்கக்கண்டு பரமகோபங்கொண்டு கட்டைகளாலடிக்கும் பிராமணருடன்கூட கைப்பிரம்பால் தானும் சூடுசூடாகவடித்துத் துரத்திவிட, பகவான் இந்த ரூபத்தை மறைத்து நிஜரூபத்துடன் கபீர்தாஸரிடம் வரக்கண்டு, அந்தத்தாஸர் சுவாமி! கோபன்னு நல்ல பூசைகொடுத்தாரா? என்று கேட்க, ஆ! ஆ! கொடுத்தார் ஒருடம்பிருடம்பாச்சுதென்று பரிகாசமாய்ச்சொல்லி விக்கத்தையும் காயத்தையும் காட்டக்கண்டு கபீர்தாஸர் மனம்நொந்து சைத்திய உபசாரஞ் செய்யும்போது பகவான் இராவணாதிகளிடத்தில் பட்ட அடியைக்காட்டிலும் இது மிஞ்சியதல்ல நீ அஞ்சவேண்டாமென்று கெஞ்சிக்கெஞ்சிச்சொல்லி அந்தரத்தனராக இங்கே கோபன்னு நூதனமாக பாகம்செய்வித்துத் தீபாராதனம்பண்ணித் தானும் புசித்துத் தனது கோஷ்டியுடன் கபீர்தாஸரிடம் வந்து சொன்னபடிக்குப் பகவான் வரவில்லையே யென்று கேட்கப், பகவானு வரவில்லை; மகிஷரூபியாய்வந்த ஜகதீசனை அடித்துத் துரத்திவிட்டு என்னிடத்தில்வந்து இப்படிச்சொல்வது சரியோவென்று கபீர்சொல்ல, அதைக்கேட்டு மனம்நொந்து மகா பாவியாய்விட்டேனே யென்று உருகிப் பகவானைப் பாடுதல்.

௬. இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனையேனுளக்கூடாது என்னுடனுனக்
கென்னவாதிப்போது

அநுபல்லவி.

தினையளவுக்கருணை செய்தாலுமென்கவி
தீருமாகையால்மனந் தேறும்வகையைச்சொல்லி (எனை)

சரணங்கள்.

௧. அன்னை தந்தைகுருவு மருந்தோழனுந்தம்பியும்
அகிலமும்நீதானென் றனவரதம்நம்பியும் (எனை)

௨. ஆதாரம்வேறில்லையென் றறிந்தவர்க்குக்கிட்டும்
பாதாரவிந்தங்கிட்டும் படிக்கடிமைபட்டும் (எனை)

௩. கனவிலுமுனதடி வனசமனதிலுறும்
கனமேகனமென துனவுனதினந்தோறும் (எனை)

௪. தஞ்சம்பாத கஞ்சமென்பதைநாடி
அஞ்சலஞ்ச லஞ்சலென் றுரையாடி (எனை)

௫. பார்த்தனன்று பணிந்திடவெற்றி
ஏர்த்தவன்சங்கை யிணையகற்றி (எனை)

௬. கீர்த்தனை தறிந்தேபுத்தி
சேர்த்தனைப்பா யெனக்கைப்பற்றி (எனை)

௭. பொன்னடிக் களவாகவுன்னும்
சின்னசாமி தாசனென்னும் (எனை)

வசனம்.

இராமதாசர் இவ்விதமாய் எம்பெருமானைத் துதிக்கும்போது, கபீர்தாசர் அவருக்கும் சர்வேஸ்வரஸ்வரூபத்துவத்தை யுபதேசித்துச் சிலநாள் அங்கு பத்ராலோசனைப் பஜித்துக்கொண்டு கோபன்னாவினது விருந்து புசித்துக்கொண்டு சத்காலக்ஷேபராயிருந்து உடனே திருநாராயணபுரத்தில் திருவைரமுடிசேவை செய்யக்கருதிப் புறப்படும்போது தானும் பாரசம்பாரகேசரஞ் செய்துக்கொண்டு புறப்பட்டுக் கோமளபுரமென்னும்கிராமத்திற்குச் சமீபத்தில் கிடக்கும்போது அவ் வூரிலிருக்கும் பரமபாகவதோத்தமியாகிய சக்குபாயென்னும் மாத்வ ஸ்திரீ தாம் இவர்களுடன் திருநாராயணபுரம்போய் பகவானைச் சேவிக்க அபிப்பிராயங்கொள்ளுதல்.

௧0. இ-ம்-பிலஹரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சேவிக்கமனம்பூண்டாள் திருநாராயணபுரத்
திருநாளிற்பெருமானைச் (சேவி)

அநுபல்லவி.

ஆவிக்காவியாயெங்கு மேவியிருப்பவனைப்
பாவித்தவனையன்றி நாவிற்காதவர் தங்கள்
தேவியர் தனையரைக் கூவிமாவிநோதமாய்க்
கோவிந்தாவென்றேகும்ப சோவிசாலரைக்கண்டு (சேவி)

சரணங்கள்.

௧. இக்குவலயத்தின்மீது முக்குறும்பையொழித்ததா
லெக்குறையுமில்லாத பக்குவக்கபீரகம்மு
ருக்குமணிநாதன்பாதம் சிக்கும்படிசெய்வார்சுகம்
தக்குமென்றாலோசித்திந்தச் சக்குபாய்பின்னேநடந்து (சேவி)

௨. மட்டிக்கணவன்மாமனும் அட்டிசொல்லமாமியார
தட்டிமிரட்டிக்கம்பத்திற்கட்டி முட்டியாலேகுட்டி
எட்டியடித்துக்கோபித்துக் கிட்டிப்பதத்தாலுதைத்துக்
கெட்டிக்காரியென்றிருந்தேன் பட்டிநீயென்றுதிட்டியும் (சேவி)

௩. இன்னமுள்ளபங்துக்களும் என்னடியபடமாவென்று
சொன்னமொழியைக்கேளாமற் றன்னபிமதத்தின்படிப்
பன்னகசயனனெழிற் பொன்னடிகளேயேமனம்
துன்னவுன்னிப்பன்னிநிதம் சின்னசாமிதாசனைப்போல் (சேவி)

வசனம்.

சக்குபாய் இவ்வண்ணம் கருதி ஊர் அருகில் நடந்துகொண்டிருக்கும் கபீர் கோபன்னா முதலியவருடன் திருநாராயணபுரம்போய் வருவோம் வாருங்களென்று வீட்டில் கணவன் மாமி மாமனாரையும் பார்த்துச் சொல்லக்கேட்டு அவர்கள் கோபித்து வைது அடித்ததுமன்றி ஒருவேளை சொல்லாமல் நடந்தாலும் நடப்பாளென்று கூடத்துக் கம்பத்திலிறுக்கி முறுக்கிக் கட்டிவிட்டு உள்ளே போகக்கண்டு இவளது அன்பினால் பகவான் சதுர்ப்புஜராய் சங்குசக்கரகதாபாணியாய் பீதாம்பரதாரியாய் கிரீட குண்டல நூபுர கேயூர கௌஸ்துபஹாராதியாபரணசஹிதராய் தரிசனங்கொடுத்து அம்மா! சக்குபாய்? நான் நிஜரூபமாய்த் தரிசனங்கொடுத்திருக்க எனது அர்ச்சாரூபத்தில் இன்னமேன் உனக்கு இச்சையென்றருளிச்செய்ய, அது நிரந்தரமாய்ச் சேவிக்கத் தக்கின ரூபமாகையால் அதில் இச்சை மாறாதென்று சொல்லக்கேட்டு, ஆனால் நான் உன்னைப்போல் ரூபிகரித்து உனது கட்டையவிழ்த்துவிடுகிறேன் உனக்குப்பதில் என்னைக் கட்டிவிடு; நீபோய் வாவென்றருளியபடியே ரூபிகரித்து கட்டை யவிழ்த்துவிட, அவள் எம்பெருமானைக் கம்பத்திற் கட்டிவிட்டுப் பகவான் மாயையால் ஒருத்தர் கண்ணிலுந் தென்படாமற்போய் கோபன்னா முதலானவர் நடந்துகொண்டிருக்குமிடம்வந்துசேர, அவர்கள் இவளைப்பார்த்து உனது உடம்பு மெலிந்து நலிந்து சூடுகொண்டிருப்பானேனென்று கேட்கும்போது சக்குபாயி நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லவினவி இவ்ளுடைய பக்தியையும் இவளுக்காகப் பகவான் கட்டுண்டதையுமெண்ணி வேதங்களுக்கும் பிரமாதி யோகிகளுக்குங் கட்டுப்படாத பரப்பிர்மம் கட்டுண்டதன்றோ! இவளுடைய பாக்கியமே பாக்கியம்! இது நமக்குக் கிடைக்கவில்லையே! என்று உருகிக் கபிர்தாசரும் இராமதாசரும் சொல்லுதல்.

— கக. இ-ம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கட்டுண்டானா கண்ணன்மணிவண்ணன்
கட்டுண்டானா

அநுபல்லவி.

எட்டக்ஷரத்தை எண்ணுஞ்சக்குபாய்
இஷ்டம்நிறைவேற இவணங்குபோய் (கட்டு)

சரணங்கள்.

க. வரபாக்கிய வதிசோதையாலே
உரலிலேகட் டுண்டதுபோலே (கட்டு)

உ. கறைக்கண்டன்கஞ்சன் காணாததேவன்
மறைக்குமெட்டாத மகானுபாவன் (கட்டு)

ங. மனங்குவிந்து வரவரநான்
எனதற்றவரிடம் தங்குந்தான் (கட்டு)

ச. சின்னசாமியுள்ளம் சேர்ந்தவனென்று
சொன்னசாமிகட்கும் சலபமின்று (கட்டு)

வசனம்.

இந்தப்பிரகாரம் சொல்லிச் சக்குபாயையுங் கூட அழைத்துக் கொண்டு கபீர் முதலியவர்கள் திருநாராயணபுரத்திற்கு ஏகும்போது பகவானைப்பாடுதல்.

கஉ. வடமொழி-இ-ம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாலயகிரு பாலயமாம்

அநுபல்லவி.

பராத்பரதர மங்களகர (பால)

சரணங்கள்.

க. பரமதயாசமுத்ர ராமபத்ர (பால)
உ. பதங்ககுலகலச பாராவாரசந்த்ரராமசந்த்ர (பால)
ங. பங்கஜதளவிபலோசன சங்கரசங்கடமோசன (பால)
ச. பாபஹரநாமதேய பார்வதீசபாகதேய (பால)
ரு. பங்கேருஹபவவந்தித பாதபத்மசுபசரித (பால)
சு. பாலிதசின்னசாமிதாஸ பத்மினீசமத்யவாஸ (பால)

வசனம்.

இவ்விதம் பாடிக்கொண்டு திருநாராயணபுரஞ்சேர்ந்து பாகவத கோஷ்டியுடன் பகவானைச்சேவிக்கும்போது கபீர்தாஸர் அய்யனைத் தோத்திரஞ்செய்தல்.

கங. இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னையெனக்களிக்காது ஞாயமா
இன்னம்மாயமா

அநுபல்லவி.

தன்னையறியாமற் றவித்துவெம்பியும்
உன்னையடுத்துய்ய வுணர்ந்துநம்பியும் (என்)

சரணங்கள்.

௧. இதரலாபத்தி விச்சையில்லாமல்
இந்திரியங்களி லென்றுஞ்செல்லாமல்
மதபேதமான வார்த்தைசொல்லாமல்
மண்ணுடலைக்கண்டு மயங்கிநில்லாமல்

சததமுநெஞ்சை யுருக்க
சந்தோஷமே பெருக்க
சிதநலமிருளைக் கருக்க
சின்னசாமியா யிருக்க (என்)

வசனம்.

இவ்வண்ணம் மைவண்ணனைத் துதித்துத் தொழுது உற்சவ பூர்த்திபரியந்தம் அங்கிருந்து உடனே புறப்பட்டுத் திரும்பி வரும்போது சக்குபாய் அவர்களுடன்கூடத் தனக்கு முன் அவ்விடம்போயிருந்த பக்கத்து வீட்டுக்காரி சஹிதையாய் வருதல்.

௩௪ வடமொழி-இ-ம்-சங்கராபரணம்- தாளம்-ஆதி.

பல்லவி.

புனராகதா புருஷோத்தம தரிசனமதா

அநுபல்லவி.

மனஸ்ஸமாதானங்கி ருத்வா
மானினீசுத்த ஸத்வா (புன)

சரணங்கள்.

௧. நாராயணபுரமமலம் கத்வா
நாராயணமாநந்தம் நத்வா
பாராயணசுகிர்தவிதித தத்வா
பாபம்ஹித்வாபரமம் மத்வா (புன)

௨. சர்வேசுவரம் ஸ்தம்பேபத்வா
ஸஜ்ஜனசேவா மத்வனிலப்த்வா
நிர்வாணப்ரதேய மிதிபுத்வா
நிகடக்கிரஹஸ்தயா ஸஹவத்வா (புன)

௩. பன்னகசயனு பிரசிதகீதா
பாவக்ஞாபரம குணோபேதா
சின்னஸாமிஸம் ஸேவிதபூதா
ஸ்ரீசக்குபாயி திவிக்கியாதா (புன)

வசனம்.

இவ்விதம்வந்த சக்குபாயை யழைத்துக்கொண்டு கபீர் கோபனு முதலானவர்கள் கோமளபுரத்தின் அக்கிராரத்தின் வீதியில் பகவத் பஜனை பண்ணிக்கொண்டு வரும்போது அவ்வூராரனைவரும்வந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க, இந்தச் சக்குபாயி புருஷனும் மாமன் மாமியும் வெளியில்வந்து பார்க்கும்போது நாலைந்துதினமாய்த் தங்கள் வீட்டில் வசித்துக்கொண்டிருந்த மாயாசக்குபாயும் மெள்ளவந்து எட்டிப்பார்க்கும்போது அவர்கள் இரண்டு சக்குபாய்களைக்கண்டு ஆச்சரியமடைந்தசமயத்தில், மாயாசக்குபாயி மறைந்துவிட நிஜசக்குபாய்தனது கிரகம் வந்துசேரக் கண்டு அவளால் முன்நடந்த சேதிகளை யறிந்துக் கொண்டு அம்மூவரும் கபீர் முதலானவர்களுடைய சந்நிதியிலுருகுதல்.

௧௫. இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மோசம்போனோமே மூவரும்
மூடர்களானோமே

அநுபல்லவி.

ஈசனோடுமலர் வாசனறியாமல்
இன்னந்தேடுமவ னென்றுகுறியாமல் (மோச)

சரணங்கள்.

௧. செப்பியபடிக்குச் செய்ததென்னபொய்யோ
இப்படிச்சோதித்தா லென்னசெய்வோமையோ (மோச)

௨. சக்குபாயுருவம் துன்னியவன் திரு
விக்கிரமனென்று மேவாமற்பெரு (மோச)

௩. திருநாளென்னச் சிறுக்கியென்றுபேசி
ஒருநாழிகையையோ வோயாமலேயேசி (மோச)

௪. கணிசமில்லாமற் கண்டபடிவைது
துணையனைத்துந் தோய்த்திடச்செய்து (மோச)

௫ களபகஸ்தூரி கந்தந்தந்துதொழு
துளபமெங்கென்று சொல்லிச்சொல்லிமுழு (மோச)

௬. தூபாதிகளைச் சுருக்காகக்கொண்டு
வாபார்ப்போமென்று வகைவகைவிண்டு (மோச)

௭. தன்னவளுங்கோபந் தரிக்கும்படிக்கு
சின்னசாமிகூடச் சிரிக்கும்படிக்கு (மோச)

வசனம்.

இவ்வண்ணம் உருகக்கண்ட மூவரையும் நோக்கி கபீர்தாசர் அவர்களுக்குப் பக்திமார்க்கத்தை யுபதேசித்துச் சக்குபாயினது பெருமையுஞ்சொல்லி அவர்களால் பூஜைகளைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு மார்க்கத்தை யனுவர்த்தித்து வரும்போது கோபன்னு முதலானவர்கள் கேட்க, ஸ்வானுபவத்தை வெளியிடல்

௧௬. இ-ம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

௧. அடக்கியாண்டவனைநிரதிச யானந்தத்தாண்டவனை
மடக்கிக்கொண்டாண்டி பேசாத வகையும்விண்டாண்டி

௨. தனித்துநானிருக்கஎன்னை யவன்தழுவிக்கொண்டாண்டி
இனித்தவிரவிடேனென்றுறுதி யெனக்குரைத்தாண்டி

௩. பேசாதிருப்பதுவேபேரின்பம் பேசநேராதே
பேச மற்பேசாமலிருக்கும் பேரின்பம்வாராதே

௪. என்றுரைசெய்தாண்டிஎன்னைச்சுற்று மிருளைக்கொய்தாண்டி
அன்றுரைபொய்தாண்டிபரிபூர ணானந்தமெய்தாண்டி

௫. ஆசையினாலுனக்குச்சம்பவித்த தாகமென்றாண்டி
பூசைபுரிந்ததனால்வந்தது போகமென்றாண்டி

௬. தோணுவதுபொய்யென்றெருதுக்கச் சுகமுண்டாகாதோ
காணுவதொன்றுமில்லாப்பதம்பெறக் கபடம்போகாதோ

௭. நீயாய்நானாகிநீயாய் நீயும்நானுமாகி
நீயும்நானுமாய்கையென்றகற்றி நிலைத்தவன்யோகி

௮. இதையன்றியோகமில்லையென் றியம்புமன்னாண்டி
எதையும்நம்பாதேயென்னனை யென்றுசொன்னாண்டி

௯. இந்தவகைக்கலந்தசின்னசாமிக் கென்சுபமென்றாண்டி
சொந்தமாயிந்தவகைக் கலப்பது துர்லபமென்றாண்டி

இதுவுமது.

௧௭. இ-ம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பேசாதிருப்பதேசுகம்மனதே
பின்னையொன்றைக்குறியாதே என்னைவிட்டுப்பிரியாதே
ஆசாபாசத்திலழுந்தி மனதே
அங்குமிங்குந்தேடித்தேடி யெங்கும்நிலைக்காமலோடி
வேசாறியலையாதே மனதே
விஷ்ணுவென்றுஞ்சிவனென்றும் ஜிஷ்ணுகஞ்சபவனென்றும்

ஆசாரியனென்றும் பாவனைபண்ணாதே
  அக்ஞானியவனென்றும் சுக்ஞானியிவனென்றும்
பேதபுத்தியடையாதே நிர்விசேஷ
  பிரமத்துக்குப்பேதமில்லை கர்மத்துக்குண்டென்றுஞ்சொல்லை
நிதானித்துநீதானே கண்டுகொண்டு
  நிலையாமலிதைத்தள்ளி யலையாதேதுள்ளித்துள்ளி
எழுந்துலச்சைகொடாதே பரம்பொருள்
  எட்டுதிக்குந்தேடினாலுங் கிட்டுமோகிட்டாதுமேலும்
வானம்கிணக்கோபுரமேறும் வாறுபோல
  வாதஞ்செய்துபராகந்த போதத்தைவிடாதேயந்த
மகாதெய்வமந்தர்யாமியை பிழைக்கடை
  மருந்துவீரியஞ்செய்யும் அருந்துவினையைக்கொய்யும்
ஏகசாக்ஷியான வழக்கையதிகாரி
  எடுக்காமற்றானேவிட்டு விடுக்காதேபாடுபட்டு
ஒன்றுதானென்றாலுமிரண்டைப்பாரிந்த
  ஔவைசின்னசாமிசொன்ன தாகையாலதிகமென் [illegible]

கஅ-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-அட[illegible]சாப்பு.

பல்லவி.

பாழுந்தெய்வத்தைநம்பிப் பாழாய்ப்போனேனே
பரதேசியானேனே

அநுபல்லவி.

சூழும்பவமதிக — துக்கமென்றடமார்க்கத்
தொலைத்துக்கர்மபந்தத்தைக் — கலைத்திடமாக (பாழு)

சரணங்கள்.

க. அளவில்லாதாசைகொண்டலைந் — தெங்கெங்குஞ்சென்று
அவஸ்தைப்படும்வகையை — யகற்றிநிலைனின்று
குளவிதன்னிறமாக்கும் — கொள்கைபோலதுநன்று
கொடுக்கும்பரமசுகங் — கொண்டிருக்கலாமென்று (பாழு)

உ. மானிநான் சூனிய — மந்திரத்தைத்தேகம்
மறந்திருக்கச்செபித்த — மகிமையின்பரிபாகம்
சூனியக்காரன்வீடு — சூனியமென்றுலோகம்
சொல்லும்படிக்கிந்தச் — சுகமுண்டானதேயோகம் (பாழு)

௩. தானிறக்கமருந்து தானேதின்றுமுஹிக்கும்
ஜடருண்டோவெனுமுறை தானெப்படிசஹிக்கும்
நானிறக்கமருந்து நானேதின்றுவஹிக்கும்
நலத்தோடுசின்னசாமி நாடிக்கூடிச்சுஹிக்கும் (பாமூ)

வசனம்.

இப்படி சுவாநுபவத்தை வெளியிட்டுக்கொண்டுவந்த கபீர்தாஸரோடு கோபன்னு முதலானவர்கள் மார்க்கத்தில் ஓர் நதிதீரத்தில் வேறேயிரங்கித் திரைகட்டிக்கொண்டு தளிகை பிரயத்தினம் செய்யும்போது கோபன்னு தீர்த்தமாடி நெல்லிமரத்தடியில் திருவாராதனம் செய்துக்கொண்டிருக்கும்போது கபீர்தாஸர்வந்து சீதா லட்சுமண சமேத ஸ்ரீ ராமவிக்கிரகத்தைத் தூக்கி நதிசலத்தில் விட்டெறியக்கண்டு கோபன்னு மனம்தளர்ந்து என்குலதனத்தைவிட்டெறிந்தீரே எனக்கு என்ன கதியென்று சொல்ல, உமது குலதனமானுல் நீரழைத்தால் வருமென்ன, அவர் சொல்லைக்கேட்டு கோபன்னு மிகவும் பாடியும் வராதிருக்க உடனே கபீர் அழைக்க, தக்ஷணம் மூன்று விக்கிரகங்களும் நதிஜலத்திலிருந்து கிளம்பிப் பூஜாஸ்தானம் வந்து சேரக்கண்டு, சந்தோஷங்கொண்டு அடியேனுக்கு இந்த அநுபவம் வரவில்லையென்று பக்தியுடன் பிரார்த்தித்துக் கேட்கும்போது சகுணபக்தி யூர்ஜிதமாய் பகவச்சார நித்தியங் கிடைத்தபின்பு கிடைக்குமாகையால் அதற்குத் தகுந்த சாதகம் செய்யுமென்று உபதேசித்துக் காசிக்குப்போக யோசித்து அவரைநேசித்து எல்லோரும்பூஜித்து மந்திரத்தையாசித்து ஜகத்குருவாய்ப் பிரகாசித்து இருப்பிடஞ்சென்று தன் குருவாகிய இராமாநந்தரைக்கண்டு வணங்கிக்களிகொண்டிருக்க, இங்கு கோபன்னு பத்ராசலம் வந்துசேர்ந்து பகவத் கைங்கரியகராய் எழுந்தருளியிருக்கும்போது பன்னிரண்டுவருடமும் பூர்த்தியாக இவாது இளையமாமனுர் பாட்சாவிடத்தில் சித்திரக்கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்த கௌரவத்தால் சுபேதார்களிடத்தில் வருடத்திற்கொருதரம்போய் அவர்கள் கொடுக்கும் பொருள்களைப் பெற்றுக்கொண்டு சுகசீவனம் செய்துக்கொண்டிருந்த வழக்கத்தின்படி அவ்வருடமும் மற்ற சுபேதார்களிடத்தில் விசேஷ பொருள்களைச் சமபாதித்துக்கொண்டு பத்ராசலம்வந்து ஓர்வீட்டிலிறங்கித் தனது சேவகனைநோக்கிக் கோபன்னுவைக் கையோடழைத்துக்கொண்டு வாவென்றனுப்ப, அவன் அந்தப்படியே சொல்லக்கேட்டுத் திருவாராதனஞ் செய்துக்கொண்டிருந்த கோபன்னு இப்போதுவரச் சரிப்படமாட்டாது; இதுவரையில் பார்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயமிருந்தால் அவனை யிங்கே வரச்சொல்லுபோவென்று சொல்லக்கேட்டு, அவன் அப்படியே வந்துசொல்லக் கோபித்து அப்போதே புறப்பட்டு அருகிருந்த அவ்வூரில்போயிரங்கிப் போஜனம்பண்ணிக்கொண்டு மறுநாள் பாட்சாவிடம்போய் சித்திரக்கதைகள் சொல்லிக்கொண்டிருக்கும்போது பாட்சா இவனை நோக்கி வெளியில் சஞ்சரித்துவந்தீரே எந்தெந்த சுபேதார்களுடைய குணங்கள் எவ்விதங்கள் அதைச் சொல்லுமென்றுகேட்க, இவன்மற்ற சுபேதார்களெல்லாரும்

மகாயோக்கியர்கள் பத்ராசல சுபேதாரனான கோபன்னாமாத்திரம் மிகவும் அயோக்கியனாய் சர்க்கார்பீதியில்லாமற் பணத்தைத் தாறுமாறு செய்து தங்களிடத்தில்சொல்லிப்போனபடிக்குப் பனிரெண்டுவருடம் பூர்த்தியாயும் பணத்தைச் செலுத்தாமலிருக்கிறானென்று கார்ப்பண்யத்தால் சொல்ல தக்ஷணம் முன்மொழியைக்கொண்டு தாகீதுபிறப்பித்து இரண்டுசேவகர் வசமாய்கொடுத்துநாளன்றையதினம் கோபன்னாவை நம்மிடம் ஹாஜர்படுத்தவேண்டியதென்று சொல்லக்கேட்டு, நாளையதினங்காலையில் போவோமென்று சேவகர் வீடுபோய்ச்சேர முனிகள் வீடுவந்த தக்ஷணம் கோபன்னாவினிடத்து அன்பினால் சேதியை இன்றிரவிலேயே தெரிவிக்கவேண்டுமென்று கருதி ஒரு பிராமணனையனுப்ப அவன் அதிவேகமாய் இராத்திரி பனிரெண்டுமணிக்கெல்லாம் கோபன்னாவினது திருமாளிகைவந்து பகவத்பஜனம் பூர்த்தியானபின்பு கீர்த்திமிகுந்த கோபன்னாவைநோக்கி ஆர்த்தியுடன் பிராமணன் சொல்லுதல்.

௧௬. இ-ம்-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமதாசரே ராம
நாமநேசரே

அநுபல்லவி.

காமதாசன் மாமன்பண்ணிய
கலகமீது காணும்புண்ணிய (ராம)

சரணங்கள்.

௧. செல்வமென்ப தென்னமெய்யா
தெய்வபக்தி யென்னபொய்யா
பல்வகை மதியைக்கொய்யாப்
பாவியென்ன செய்தானையா (ராம)

௨. பருஷபாவ புருஷனென்றுவேதா
படைக்கவந்த பாதகனொடுவாதா
வருஷந்தோறுந் தருவதுபோலேதா
வதனுக்கு முதவிடலாகாதா (ராம)

௩. மேதா விகளாகியபேரும்
விளங்கும் வேதமுடிவிலூரும்
சீதாபதி திருவடிசேரும்
சேதனர்க்கேது தீதுபாரும் (ராம)

௪. பலபலவித நலமருளுங்கோசல
பதிரகுபதியே நிதிபத்ராசல (ராம)

௫. சங்கையே னிலங்கைவிபீ
ஷணனுக் களித்தசெழும்
செங்கையா னிருக்கநிதம்
சின்னசாமி தாசன்தொழும் (ராம)

வசனம்.

இவ்வண்ணஞ்சொன்ன பிராமணனுடைய வார்த்தையைக் கேட்டு ராமதாசர் தாமரையிலையின் தண்ணீர்போல டோலாயமான மனஸ்தராய்த் தளரும்போது சமீபத்திலிருந்த பெரியோர்கள் இவருக்குத் தைரியஞ்சொல்லுதல்.

௨0. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கோபன்ன கோபன்ன
ஆபன்னரக்ஷகனை மறவாத (கோப)

அநுபல்லவி.

ஸ்ரீ பன்னகசயனனருள் நிறம்பிய
சித்தமொத்தவன் திருவடிநம்பிய (கோப)

சரணங்கள்.

௧. அகிலேசுவரி ஜானகியென்னுந்தாய்
அடிபணிந்துநல் லகத்தினிற்றுணிவாய்
பகிரங்கமாகப் பாக்ஷாவிடம்போய்
பாக்கியைபைசல் பண்ணிவாருமோய் (கோப)

௨. சிந்தையென்பது ஜெகத்தினிலெவருக்கும்
க்ஷேமகரமன்று தேகத்தையுருக்கும்
எந்தைமுகுந்தனை யிணங்காதிருக்கும்
ஈனருக்கன்றோ விடரேபெருக்கும் (கோப)

௩. சுந்தரமாப் ஜப சூத்திரங்கரந்துன்ன
துளசிமணிமாலை களத்தினிலென்றுமின்ன
சந்ததம்பரமானந் தபகவச்சின்ன
சாமியாருமக்குப் பூமியிற்பயமென்ன (கோப)

வசனம்.

இந்தவகை ஆபன்னசரண்யராயும் ஆஸ்ரிதஜனரக்ஷகராயும் நித்யபுண்யராயுமிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடியை நாம் முக்கியமாய் நம்பியிருக்க நமக்கேது பயம் அஞ்சாதேயுமென்று மறுபடியும் அந்தப்பெரியோர்கள் கோபன்னவைப் பார்த்துச் சொல்லுதல்.



## உக. இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

அவனடிக்கமலஞ் சரணம்
அநுபவஸாகர தரணம்

அநுபல்லவி.

சிவனுயிருந்துலகைத் துடைப்பவனெவனோ
திசைமுகனுயிருந்து படைப்பவனெவனோ (அவ)

சரணங்கள்.

க. அளிக்குந்தொழிலைத்தா னேர்ப்பவனெவனோ
அகிலபாபங்களையுந் தீர்ப்பவனெவனோ
களிக்கும்படியன்பரைச் சேர்ப்பவனெவனோ
கடைக்கண்ணாலெப்போதும் பார்ப்பவனெவனோ (அவ)

உ. காரணகாரணனு மன்றவனெவனோ
காணக்காணமேலாய்ச் சென்றவனெவனோ
ஆரணங்களுங்காணு னென்றவனெவனோ
அறிவினுக்கறிவாகி நின்றவனெவனோ (அவ)

௩. நலஞ்செய்யும்பெருக்குள்ளே நற்குணனெவனோ
நாரதமருக்குள்ளே நற்குணனெவனோ
உலகுருவெனும்போது பற்குணனெவனோ
உற்றுப்பார்க்கும்போது நிற்குணனெவனோ (அவ)

ச. எங்குநிறைந்ததேவர் கோனவனெவனோ
எந்தையுமுள்ளடக்கும ஹானவனெவனோ
செங்கமலக்கண்ணுள வானவனெவனோ
சின்னசாமிகவிக்கு ளானவனெவனோ (அவ)

வசனம்.

இவ்வண்ணம் தைரியஞ்சொல்லியும் தெளியாதிருந்த கோபன்னு வைப்பார்த்து அங்கிருந்த பெரியோர்களிலொருவர் ஏன் அஞ்சுகிறீர் ஜகத்குருவாயும் சேஷாம்சபூதராயும் ஜகதுஜ்ஜீவனநிமித்தம் விசிஷ்டாத்வைத தரிசன ஸ்தாபனாசாரியரா யெழுந்தருளியிருந்த திவ்ய மங்களமூர்த்தியான உடையவருக்கு ஆதிகாலத்தில் யாதவப்ரகாசனால் ஜனித்த ஆபத்திலேநின்றும் அவதரித்த தக்ஷணம் ரக்ஷணஞ்செய்யும் சுபலட்சணமுடைய ஸ்ரீவத்ஸவக்ஷனை புண்டரீகாக்ஷன் பக்தபக்ஷபாதியாகையால் உம்மை இந்தஸ்வல்ப ஆபத்திலேநின்றும் உத்தாரணஞ் செய்யானோ வென்னவினவி, ஆச்சரியமடைந்தெதப்படியென்று கேட்க, அவரந்தரங்கபக்தியுடன் அருளிச்செய்தல்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# உடையவர் சரித்திரம்.

விருத்தம்.

பூமாதுநாதனது நியமனத்தால்
பூதபுரியினிலரித கோத்ரனென்னுஞ்
சீமானும்ஆசூரி கேசவாரியன்
தேவிகாந்திமதிமனங் களிக்கவன்பர்
பாமாலையிடத்திருவா திரையிற்சுக்ல
பஞ்சமிபார்க்கவ வாரங்கூடுநாளில்
ராமாநுஜாசாரிய னவதரித்த
நலஞ்சொல்வே னவரது ப்ரபலஞ்சொல்வேனே.

௨௨. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்களகலிநாலாயிரத்தீரைம்பத்தொன்பது
வருஷங்களானதின்மேலே
பிங்களசைத்திரசுத்தபஞ்சமியாருத்திரை
பிருகுவாரத்திலொருக்காலே

தேஜோமயமாயவதரிக்கப்பெரிய
திருமலைநம்பியங்குவந்தார்
ஓஜோபலங்கண்டிளையாழ்வாரென்
றோங்குந்திருநாமந்தந்தார்

அன்னப்ராசனம்சௌளமுபநயனங்கலி
யாணச்சடங்குகளுங்கண்டு
உன்னதமதியொடுவேதங்களடங்கலும்
ஓதினரேமகிழ்கொண்டு

கமலநயனபட்டர்களிக்கச்சுதராயந்தக்
காலத்திற்கோவிந்தபட்டர்
அமலகுணங்களுடனவனியிற்றோன்றினர்
அகிலரும்புகழ்கின்றசிஷ்டர்

அவருக்கும்பெரிய திருமலைநம்பிதானே
யளித்திட்டனர் திருநாமம்
குவலயத்திற்சின்னசாமிமுதற்சேதன
கோடிகளிக்குமிது க்ஷேமம்

விருத்தம்.

பண்டுயாக்கியவல்க்ரியபகவான்வைசம்
பாயனமுனியினிடம்வந்ததுபோல்திவ்ய
தண்டுழாய்முடிவிஜயராகவன்வாழ்
சம்பாதியினதநுஜன்தீர்த்தமென்னும்
வண்டுலாவியசோலைநகரில்யாத
வப்பிரகாசன்சமர்த்தபதிவன்பால்
அண்டுகொளாமறைப்பொருளையறியவேண்டி
யடுத்திட்டார்அத்யயனந்தொடுத்திட்டாரே.

உ௩. இ-ம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

யாதவப்பிரகாசனிடத்தில் ஓதவந்தாரே (யாத)

அநுபல்லவி.

வேதசாஸ்திரங்களை யற்புதமாய்
விதம்விதமாய்ப் பதம்பதமாய் (யாத)

சரணங்கள்.

க. நமஸ்காரம்புரிந்து அகம் மமகாரஞ்சரிந்து
கமனீயமலர் களடிசொரிந்து
கலைவல்லானவனென்று தெரிந்து (யாத)

உ. சுபார்த்தமேதும்விடுத் தபார்த்தவாதும்
உபாயத்திறை னுரைசெய்தெப்போதும்
ஓங்கும்வாதிகள்பின் வாங்கும்படியோதும் (யாத)

௩. தன்னகஞ்சோதிக்கும்வகை சொன்னதைச்சாதிக்கும்
சின்னசாமிதாஸன் தினமும்மோதிக்கும்
சிந்தையுகந்தவர் சிந்திக்கப்போதிக்கும் (யாத)

விருத்தம்.

இந்தவிதங் குருவினிடம் படிக்குநாளில்
எண்ணெயொரு தினமிவருந் தேய்க்கும்போதி
லந்தமுகுந் தனையவ னிகழ்ந்துபேச
அகங்கலங்கி முகம்வாடி யழுதகண்ணீர்
சந்ததமாய்ப் பெருகித்துடை யுருகக்கண்டு
சங்கடங்கொண் டேசிலநாள் கழிந்தபின்னே
எந்தவிதத் திவரைக் கொல்லமோசம்
எண்ணினன் யோசனையும் பண்ணினனே.

## உச. இ-ம்-முகாரி-தாளம்-ஆதி.

### பல்லவி.

எண்ணினான்-யோசனை-பண்ணினான்

### அநுபல்லவி.

மண்ணிலிவனிருந்தா லிவ்வண்ணம்
மதபீடேறுதென்றே யெண்ணம் (எண்)

### சரணங்கள்.

க. மங்கைகாந்திமதி மைந்தனையுள்ள
சங்கையில்லாமல் கங்கையில்தள்ள (எண்)

உ. சாஸ்திரங்கற்ற சந்நியாசிநல்ல
பாத்திரரிவரைக்க பட்டமாய்க்கொல்ல (எண்)

ந. தன்னடியாரொடு சந்தோஷமேவி
சின்னசாமிபதந் தெரியாப்பாவி (எண்)

### விருத்தம்.

வந்தியா நந்தனனென்பது போலென்றும்
வாக்கியார்த்தஞ் சொல்லியவன் வழியிலேக
பந்தியா யடியார்கள் வரக்கோவிந்த
பட்டாவ னதூபடஞ் சொலயிடைந்தே
சந்தியா வந்தனஞ்செய் யாமலங்கே
தவித்தெங்குந் தீர்த்தமில்லா திருக்கவாடி
விந்தியா டவியிலொரு மரத்தின்கீழே
வெதும்பினார் கண்களினீர் ததும்பினாரே.

## உரு. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

### பல்லவி.

என்னமாய்வருமோ துணை
ஈஸ்வரக்கருணை

### அநுபல்லவி.

அன்னமாகாரமில்லாமல் மனத்தில்
அச்சமடிக்கடிமிச்சமாம் வனத்தில் (என்)

### சரணங்கள்.

க. புலியரிகரடிகள்வாசம் புரிவதன்றோவித்தேசம்
கிலிவிடுவதுபிரயாசம் கிட்டுமென்றோமோசம்
சலித்திடாமற்படிக்குச் சின்ன
சாமிதன்னிடமே துன்ன
மலினமகன்றப்ர சன்ன
மதியோடெந்தநாளும் உன்ன (என்)

விருத்தம்.

இப்படியே யிளையாழ்வான் துதிகள்பேசி
யிருள்சூழ்ந்த விடத்திலிருந் திடவன்பாக
மைப்படிக்கண் பெருந்தேவி யுங்கஜேந்திர
வாதனும் வேடுவச்சியும் வேடனுமாய்வந்தே
செப்படிவித்தை யைப்போலக் காஞ்சிதேசஞ்
சேர்த்துமறைந் திடவிழித்தாச் சரியங்கொண்டு
மெய்படிந்த மனத்தினராண் டவனைநன்றாய்
வேண்டினார் பவக்கடலைத் தாண்டினாரே.

௨௬. இ-ம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தபக்ஷம்மறவாதே
எந்தவேளையுமென்மீதே

அநுபல்லவி.

சந்ததமுனது சரணாரவிந்தம்
சிந்தையிலிருக்கச் செய்தாலேதுபந்தம் (இந்த)

சரணங்கள்.

௧. என்னைக்கொல்ல வுன்னித்துகை
யில்லாவடி யாரொடுசிகை
தன்னொடு பூணையில்லாப்பகை
சந்யாசியி னுள்ளம்புகை (இந்த)

௨. துன்னபயங் கொண்டேகுகை
சோர்ந்திடு மக்கணமேநகை
சின்னசாமி கொள்ளத்தகை
சேராமற் செய்திடும்வகை (இந்த)

விருத்தம்.

இளையாழ்வா னிந்தவிதந் துதிக்கவங்கே
யிவரைவிட யாதவப்ர காசனெண்ணம்
விளையாம லகங்கலங்கிக் கங்கையாடும்
வேளையந்தக் கோவிந்த பட்டர்கையில்
முளையாத சிவலிங்கம் மாயையாலே
முளைத்திடக்கண் டென்குருவி னேவல்கொண்டே
வளையாத வழிவந்து ப்ரதிஷ்டைசெய்து
வலம்வந்தார் மழலைமங் கலம்வந்தாரே.

AT 43

சந்த விருத்தம்.

மழலை மங்கலம் வந்து விழிகளாய்த்
தழலைப் பானுவைச் சந்த்ரனைத் தாங்கினன்
கழலை நம்பிநற் களத்தி நாயகன்
நிழலைப் பற்றியே நேசித் திருந்தனர்.

உஎ. கட்கா-இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

உடனேநடந்ததைக்கேளும்-அநுபவரே
ஒமீகாவைஷ்ணவரே

அநுபல்லவி.

ஜடமதியாம்யா தவப்பிரகாசன்
தடமடங்கலுங் கடந்ததீசன்
ராமாநுஜனை ரட்சித்ததறிந்தே
சீமானென்றெண்ணிச் சினமதையெறிந்தே (உட)

சரணங்கள்.

க. காஞ்சிவந்திவர் கமனீய்யதாளில்
வாஞ்சைகொண்டிவர்க் கோதிவருகின்றநாளில்
ஆளவந்தாரந்த அரங்கத்தைவிடுத்தே
காளமுகிற்பரவுங் கச்சிநகரடுத்தே
இவரைக்கண்டுமகிழ்ந் திருதயந்தணிந்தே
தவத்தோர்க்கருள்வர தனைக்கண்டுபணிந்தே (உட)

உ. அரங்கமேகஇங் கரசன்சுதனை
பிரமரட்சசொன்று பிடித்திடவதனை
தடைசெய்யுங்குருவதைத் தடுத்ததுஜாட
உடையவர்வாக்கிய முணர்ந்துவிட்டோட
மகிமைகண்டவனும் வைஷ்ணவனுகி
மகிழப்பெரியதிரு மலைநம்பியேகி (உட)

ந. கோவிந்தபட்டரையாட் கொண்டதைக்கண்டார்
மாவிந்தையென்றெண்ணி மனக்குறைவிண்டார்
தெய்வாதீனமென்று தெரிந்தருள்பூண்டார்
மெய்மகிழ்ந்தன்பரை மேன்மையிலாண்டார்
பொன்னடிகளைநம்புஞ் சின்னசாமிதுரிதம்
பன்னும்பஞ்சாய்ப்பறக்கப் பண்ணுமிவர்சரிதம் (உட)

விருத்தம்.

இவ்வகையிளையாழ்வாநும்
செவ்வையாய்த்தேறிமுன்னோர்
எவ்வகையியம்பினரோ
அவ்வகையனுஷ்டித்தாரே.

உஅ. இ-ம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பிதிருவடியை நம்பினா
நற்கருணைநி ரம்பினர்

அநுபல்லவி.

எம்பிரானியம்பிட வினவிமெச்சி
யிருமூன்றுரைபொரு ளருளியதிருக்கச்சி (நம்பி)

சரணங்கள்.

க. பெண்டுசெய்தமூன்று பிழையாலில்லறவலை
பிரிந்துபெருமானேவல் பெற்றுக்காஷாயக்கலை
தண்டுங்கொண்டுமதுராந் தகத்தேரிசென்றுநிலை
தப்தசங்கசக்கராங்க தராகிப்பெரியதிருமலை (நம்பி)

உ. ஹவிதவதனரா யரங்கனுரைக்காட்டியூர்
அறியும்படிமூன் றுவர்த்திசிமாட்டியூர்
வசிமுதலரம்பையர் வசிக்கின்றமேட்டியூர்
மகிமைபெற்றதென்று வழங்குந்திருக்கோட்டியூர் (நம்பி)

ங. பரிமுகதேவனையு பாசித்திர்தப்படியை
பரிசுத்தஞ்செய்யவாதம் பண்ணித்திரிதடியை
தரித்துக்கொண்டசின்ன சாமிதாசன்முடியைத்
தாளாலலங்கரிக்குஞ் சாமிராமனடியை (நம்பி)

வசனம்.

இப்படிக்கு நம்பிகளுடைய திருவடிகளை யாஸ்ரயித்து ஸர்வக்ஞரான உடையவர் சோழராஜன்சபையில் வித்வான்களை ஜயிக்கிற நிமித்தம் அனுப்பப் புறப்பட்டு ஸ்ரீகூரத்தாழ்வானது பெருமையைத் தெரிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் கேளும் கோபன்னவென்று அந்தப்பெரியவர் சொல்லுதல்.

உகூ. இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

கூரத்தாழ்வானைப்போ லேது
குவலயத்தின் மீது

அநுபல்லவி.

தீரத்தாலகில திரவியங்களோடும்
தேகாபிமானமு மாகாதென்றுவிடும் (கூரத்)

சரணங்கள்.

க. மடியிற்கனமிருந்தால் வழியிற்பயம் வருமென்றுரை பேசி
மனையாளிடமிருந்த தங்கவட்டிலை வாங்கியோங்கி வீசிச்
செடியிலெறிந்துவிட்டு ஸ்ரீரங்கத்திற் கிடந்த
திருக்கோலத்தைக்கண்டு சேவித்திட நடந்த (கூரத்)

உ. மண்ணையாளுஞ் சோழராசன்சபையினில் ...திகளை வென்று
...பரசுதேவனே பரனென்றுசாதித்த வகையறிந்தவ னன்று
கண்ணைவாங்குவேனெனக் கசட னுனை யறிந்த
கண்களாகாதென்று கழற்றிவிட் டெறிந்த (கூரத்)

ந. காமாதிகளா மாத்மசத்துருக் களைநன்றாய் ஜயித்துக்
கருணாநிதியதிபதியை யாஸ்ரயித்துக் கலைகளிலதி ஸயித்து
ராமாம்சமானதால் ரங்கனெனி யார்ந்த
ரமணிய்யசரண ஸரசிஜத்தைச் சேர்ந்த (கூரத்)

௪. திருவரங்கத் தமுதனுரையுடையவர் திருவடிக்கா ளாக்கித்
திருவரங்கத் தருமாதிகாரமிட்டுத் தேசிகன்சீர் தூக்கித்
தருமபுத்திரனென்னுந் தனதுசின்ன சாமி
தாசனுக்கும்பரதத்துவஞ்சொன்ன சாமி (கூரத்)

வசனம்.

அந்த ஸ்ரீகூரத்தாழ்வானது திருக்குமாரராகிய பட்டர் பெருமையைக்கூறல்.

ந௦. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பட்டருக்கேயடிமை பட்டோம்
பரமதத்திலாசை விட்டோம்

அநுபல்லவி.

நஷ்டமில்லாநலம் நண்ணுஞ்சராசர
நாதன் ஹரியென்று நாட்டும்பராசர (பட்ட)

சரணங்கள்.

க. பிக்காங்குணமென்னுமலையிற் சிக்காமலவாவலையில்
புக்காமலசத்கலையில் சொக்காதுதனதுநிலையில்
எக்காலத்திலு மிருந்துபிரபந்த
இச்சைமிகுமாழ்வா னிதயமுகந்த
அக்காரவடிசல் விக்ரகமாயிந்த
அவனிமுழுது மானந்திக்கவந்த (பட்ட)

உ. உர்வியோகநிஷ்டனை துர்வமுக்கினிஷ்டனை
கர்வமிகுந்துஷ்டனை சர்வக்ஞபட்ட[illegible]
நிர்மூடனுக்க நினைத்தொருகரம்
நிறைந்தமண்ணால் நிக்ரஹித்தப்புரம்
பருவமதி பரவிமவசரம்
பாவிக்கும்பால்பத்தைப்பார்த்து நிரந்தரம் (பட்ட)

ந. ஏகசந்தக்ராகி நீகாரனுப்போகி
ராகமில்லாயோகி சேகரரென்றன்பாகி
லோகமெல்லாந் துதிக்கவேயென்ன
நோன்புகள் நார்த்தாளபின்ன
ஸ்ரீகரிதானென்று சிந்திக்கும்ப்ரபன்ன
சின்னசாமிதாஸ சித்தப்ரசன்ன (பட்ட)

வசனம்.

இந்தப் பட்டர் முதலிய பாகவதோத்தமர்கள் பரமாசாரியரான பாஷ்யகாரருடைய பாதாரவிந்தத்தைப்பற்றிய பாக்கியத்தைப்பகர்தல்.

நக. இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாசரய்யா-தாச-நேசரய்யா

அநுபல்லவி.

பாசமான மூர்த்தியாகிநிஜ
பக்தரைப்பாலனம் பண்ணும்ராமாநுஜ (தாச)

சரணங்கள்.

க. வாசவகம லாசனஹர
வருணதிலோக ரக்ஷணதத்பர
கோசலேசுவர குணநிரந்தர
குதூஹலமானஸ யதீசுவர (தாச)

உ. மகிமைபெற்றபாவனி சுரதுனி
வத்தபனிமலர்ப் பதஞானக்கனி
அகிபதியாகையா லாரையுந்தனி
யானந்தவெள்ளமாட்டும் லட்சுமணமுனி (தாச.)

௩. விந்தையாயரிகளை — வெல்லும்ஸாயக
விமலநாம — மலவரதாயக
சிந்தைசின்னசாமி — தாசாதிகாயக
சேதனேபய — விபூதிநாயக (தாச)

வசனம்.

இத்யாதிபாகவதகோஷ்டியுடன் உடையவர் திக்குவிஜயஞ்செய்தல்.

௩௨. இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சஞ்சாரஞ்செய்தார்-சத்கிருபைபெய்தார்
சங்கைகளைக்கொய்தார்

அநுபல்லவி.

அஞ்சாவாதிகள் — ஐஞ்சாகிலத்தினில்
பஞ்சாய்ப்பறக்கும்படித் — தஞ்சாவூர்தலத்தினில் (சஞ்)

சரணங்கள்.

௧. கும்பகோணந்திருக் — கோவிலூரிலொரு
கூட்டமர்கவந்து — கூடிவாதிக்கவரு
சம்பிரமஜனமெல்லாந் — தம்பித்திருந்தகுரு
சரணந்தான்சரணென்னப் — பொங்கும்
கருணைமயவருணாலய — ரெங்கும் (சஞ்)

௨. வெள்ளைசாத்திக்கொண்டு — வேகமாகடில்லி
மேவிக்கண்ணனையிட — மேவியிருக்கச்சொல்லி
கொள்ளைக்காலமுதற் — கூடும்பூபிவல்லி
கொஞ்சியதைக்கெஞ்சியதைத் — தொழுதும்
மிஞ்சியபூவஞ்சியுடல் — முழுதும் (சஞ்)

௩. நந்திக்கிராமம்ஜகர் — நாதங்கோவர்த்தனம்
நாராயணனெடு — நரனும்வாழும்வனம்
இந்தத்தேசமுமின்ன — மெந்தத்தேசமுங்கனம்
யோர்த்துக்கிருபைபார்த்தவரவ — ரார்த்தி
தீர்த்துமதஞ்சேர்த்திடுங்குரு — மூர்த்தி (சஞ்)

௪. அப்பனுக்குச்சங்காழி — யளித்துநீட
அன்னைவாணியும்விதிஷ்டாத் — வைதத்தைக்கொண்டாட
செப்பரியவின்பொடு — சின்னசாமியும்பாட
செல்வங்கள்பல்வகையும் — அமலமதி
நல்வழியாங்கல்விதந்த — யதிபதி (சஞ்)

## மங்களம்.

நுரு. இ-ம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்களம்-ஸ்ரீராமாநுஜாசார்யருக்கு-மங்களம்.

அநுபல்லவி.

பிங்களவஸனரவி பிரமர்க்குமதிசய
பெருமானென்றேத்துமெம் பெருமானுருக்குஜய (மங்)

சரணங்கள்.

க. நாட்டார்தனதுபதம் நம்பத்தடையவர்க்கு
நண்ணுமத்திவ்யஞானம் நல்கியடையவர்க்கு
காட்டிரிதங்கிரஹித்துக் களிக்கும்விடையவர்க்கு
கனபக்தியுண்டாக்கிக் காக்குமுடையவர்க்கு (மங்)

உ. உலகைப்பாவனஞ்செய்ய வுதித்தசுரதுனிக்கு
ஒப்பிலாதமகிமை யுதவியபத்தினிக்கு
நலங்களைப்பாடியா நந்திக்கும்ஞானக்கனிக்கு
நாகேசுவராவதார லட்சுமணமுனிக்கு (மங்)

ங. ஆசூரிகேசவா ரியகுமாரருக்கு
அகிலவாதிகளையு மகற்றியதீரருக்கு
தேசுலாவுமெதி சேகராதாரருக்கு
திசைமுகனுங்கொண்டாடும் ஸ்ரீபாஷ்யகாரருக்கு (மங்)

ச. தன்னடிக்கமலமே சரணென்றுதாழ்வாருக்கு
சகலசௌபாக்கியமுந் தந்தென்றுஞ்சூழ்வாருக்கு
சின்னசாமியைப்போற் சீர்தந்துவாழ்வாருக்கு
சிமையெங்கும்புகழும் ஸ்ரீயிளைவாழ்வாருக்கு (மங்)

உடையவர்சரித்திரம்-முற்றிற்று.

---

வசனம்.

ஆபன்னசரண்யன் சேஷாவதாரபாஷியகாரரை இவ்விதங்காப் பாற்றினானென்று அந்தப் பெரியவர் சொல்லியுஞ் சிந்தைதெளிந்துந் தெளியாததுமாய்க் கோபன்னு எம்பெருமானைத் துதித்தல்.

நுஉ. இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதம்புரியவேணும்-உனதுகிருபை
இதிலேதெரியவேணும்

அநுபல்லவி.

சதமயுதத்தொடுசி யுதமர்ப்புதம்நிர்ப்புதம்
சங்கஞ்சிலவழித்துச் சார்ங்கேதனுனதுபதம் (ஹித)

சரணங்கள்.

க. பனிரண்டுவருஷத்திற் பலகைங்கரியம்பண்ணிப்
புனிதனுகநினைத்துப் பூர்த்திசெய்ததையெண்ணி (ஹித)

உ. கிடைத்திடும்பதமிந்தக் கெடுவிலென்றுநேசித்துத்
தடையின்றிப்பொன்னுனக்குத் தந்ததையோசித்து (ஹித)

ௗ. உமைபவளுமரனு மோதும்ராமதேயா
சமயத்திற்கைவிடாதே சாமியாபத்ஸகாயா (ஹித)

ச. எந்தவேளையினி யென்னவருமோபின்னேன்
இந்தவேளைதானே யெனதபிப்பிராயஞ்சொன்னேன் (ஹித)

ரு. அதிதூரவெள்ளத்துக் கணைகட்டுவதுபோலே
மதிபலத்தாலேமுன்னம் மனுசெய்துகொண்டதாலே (ஹித)

சு. முற்காலமெண்ணுமலா மோதித்திருந்துதனம்
சர்க்காரதென்றிப்போது தளர்கின்றதென்மனம் (ஹித)

எ. வானந்தருமளவும் மானத்துடனேநிதம்
தானதருமஞ்செய்யுத் தலைக்கட்டும்மநோரதம் (ஹித)

அ. மனையாளருகில்வந்துந் தினையளவுமுடமை
தனையிடாமலிருக்கு மெனையாள்வதுன்கடமை (ஹித)

கூ. சின்னசாமிகளாங்கு சேலவரென்றுசொல்லும்
உன்னருஞ்சுதரைப்போ லுன்னிப்பகலுமல்லும் (ஹித)

வசனம்.

என்று மிகவும் மனந்தளர்ந்து ஐயனைப்பாடும் இவரைநோக்கி யருகிலிருந்த பெரியோர்கள் அநேகவிதமாய்த் தைரியஞ்சொன்னபின்னும் கோபன்ன நன்ருய்த் தெளியாதிருக்குதல்.

விருத்தம்.

இவ்வகைப்பெரியோரோது மியல்பானவார்த்தையைக்கேட்
டவ்வகைராமதாஸ ரையனைநினைத்துக்கொண்டே
யெவ்வகைப்பாக்கிதீரு மென்றுசிந்திக்கப் பின்னுள்
செவ்வையாய்ப்பாச்சாவிட்ட சேவகர்வந்திட்டாரே.

ரு௫. இ-ம்-வசந்தா-தாளம்-ஆதி.

பல்லவி.

பாச்சாமதமிதுபாரும்
பாக்கிக்குவழிசொல்லவாரும்

அநுபல்லவி.

பேச்சாகிலும் பேசாமற்பணத்தையுங்கள்
பெருமானுக்கருளப்பெருஞ் சினங்கொள்ளுமேங்கள் (பாச்)

சரணங்கள்

க. காருண்டாம்பின்னே லக்ஷத்
திருபதினாயிரம்பொன்னே நீர்
நேராய்த்தருவதாய்முன்னே சொன்னது
நெஞ்சிலில்லையோமதிமின்னே என்றும்
பாராளுமரசரைப் பகைத்தவர்பயக்கரை
சேராரென்றுரைப்பது தெரியாதோதுரை (பாச்)

உ. தீவாணமென்பதுநஞ்சம் என்று
சிந்தையொருக்கானுங்கொஞ்சம் கூட
மேவாதகவலைபுஞ்சம் இன்று
விளைந்ததுகானுமப்ரபஞ்சம் முழுதும்
தேவாம்சமேநர தேவனென்றுபன்னும்
பாவாநந்தடில்லி பதிதாநேஷனென்னும் (பாச்)

ந. ஜெகதீசுவரனிந்தப்பொருளைக் கொண்டு
செலுத்தியுமதுபயவிருளை யுடன்
அகற்றுவானேவவனருளை இதில்
அறியவேணுமுமதுதெருளை எதுக்கும்
பகவானையேநம்பிப் பாடும்விசுவாசரே
சுகமாகச்சின்னசாமி தொழும்ராமதாசரே (பாச்)

வசனம்.

இவ்விதமாகப் பாட்சாவினது சேவகரிருவரும் அழைக்கும்போது பிழைக்கவுந் தழைக்கவும், பெருமானைக்கோரிப் புறப்பட்டுப் பாட்சாவினிடம்போய்ச் சேர்ந்தார். அப்போது இவரைநோக்கி முன்னம்சொன்ன வார்த்தை பின்னமாகும்படி யின்னம் பணத்தைச் செலுத்தாதிருப்பதென்ன புத்தியென்று பன்னக்கேட்டு இவர் நன்னயமாகச் சலாஞ்செய்து பணம்முழுதும் பிராமணசந்தர்ப்பணமாயும் பகவதர்ப்பணமாச்சுது உமது பாவமெல்லாம் போச்சுது பாக்கியமும் வாச்சுதென்று இவர் சொல்லக்கேட்டு அரசன் நகைத்து உடனே கோபித்துக் கிட்ட வந்து முட்டகல்விபளந்ததுபோதும் அந்தமட்டும் மகாயோக்கியந்தான் பாக்கிக்கு வழிசொல்லும் சர்க்கார் பணத்தையாவது செலுத்தும் அல்லது ஜாமீனாவது சொல்லிவையும் இல்லாவிட்டால் பனிரண்டுவருஷம் பந்தேகானு கிடைக்கும், சந்தேகமில்லையென்று சொல்லி வினவி இவர் ஐயனைநினைந்து அகம்விநயத்துடனே யாக்கினைக்குப்பயந்து அதனால் நயந்து உபசாரவார்த்தைகள்சொல்லி பணமும் ஜாமீனுங் கிடையாது பந்தேகானு பத்ராசலத்திலிருக்கவேண்டுமென்றும் நித்தம் கோதாவரி



பாட்சா கொலுவு. கோபன்ன காராகிருஹத்திலிருந்தே பகவானைத்தோத்தரித்தல்.

ஸ்நானமும் பத்ராஜல ராமபத்ரதரிசனமும் க்ரஹத்திற் போசனமும் நடக்கவும் மற்றகாலத்திற் பந்தேகானாவிலிருக்க உத்தரம் தரவேண்டுமென்றுகேட்க, ஆத்மராமப்ரேரேபணத்தால் அவனப்படியே உத்தரந் தந்து இவருக்குப்பதிலாக வேறொருவன்பேருக்குச் சுபாசந்நதுகொடுத்து இவரைநோக்கி இந்தப் பனிரண்டுவருஷத்துக்குள் பணத்துக்கு வழிசொல்லாத பக்ஷத்திற் பதின்மூன்றாம்வருஷம் ப்ரதமதின பாஸ்கரோதயகாலத்தில் பருத்த யானையின்காலால் இடறப்படுவீரென்று பயப்படுத்தியனுப்ப, பத்ராசலத்திற் பந்தேகானாவில்வந்து பலசேவகர் பாராவோடுங்கூடி பாகவதசிகாமணியாகிய கோபன்னாவானவர் பக்திமிகுந்து பகவானைப் பூஜித்தல்.

௩௬. இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கடைக்கண் பாராயோ
கவலை தீராயோ

அநுபல்லவி.

அடைக்கலமென் றடையுமெந்தன்
அகம்பராநந்த சுகம்பெறவுந்தன் (கடைக்)

சரணங்கள்.

௧. சம்பதராணாய்ச் சுகித்ததெல்லாம்போய்
அபேதஞான மகன்றொருக்காலே
அலைந்துநிலை கலையுமென்மேலே (கடைக்)

௨. பந்தேகானாவில் பயப்படாதேநில்
வந்தேனென்றோதி மலரடிக்கஞ்சம்
மனதினில்வைத்துத் தனதாகக்கொஞ்சம் (கடைக்)

௩. நிரதமும்பாடி நினைத்துன்னைக்கூடித்
திரசுகம்பெற்றுச் செழிக்குந்தீர்க்க
சின்னசாமிகளி லென்னையுஞ்சேர்க்கக் (கடைக்)

இதுவுமது.

௩௭. இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ராகவாவீ ணாகவா
நம்பினதுவெம்பிப் போகவா

அநுபல்லவி.

தேகவாசனை தீரக்கிருபைபுரி
தேவாவென்றதுந் தெரியாதோஹரி (ராக)

சரணங்கள்.

க. பணத்தையுனக்கர்ப் பணஞ்செய்திருக்கப்
பலவிதபாதை படர்ந்துநெருக்கக்
குணங்கெடத் தகுமோசொல்லருக்க
குலசேகரதீரசூர ஜலநிதிகம்பீரவீர (ராக)

உ. துளசிகபீர் சூகரதாஸர்
துதிசெய்துபரி சுத்தரானநேசர்
வளங்கண்டுன்னை வணங்கும்விஸ்வாசர்
மலரடிதொழுதுமிதென்ன மாயஞ்சொல்லும்பரசன்ன (ராக)

௩. பண்ணவர்களும் பாடிப்பாடி
பந்தமகன்று நந்தத்தைக்கூடித்
திண்ணமீதென்றுரை செய்ததைநாடி
சின்னசாமிதாஸனும்பல தேவரும்பணிபத்ராசல (ராக)

இதுவுமது.

௩அ. இ-ம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கடனைத்தீர்ப்பதுந்தன்கடனே
காக்கவேணுமிப்போதுடனே

அநுபல்லவி.

அடமாகக்காவலி லடைத்துமவன்பேச்சா
அனலெனத்தகிக்கின்ற தாகையினாற்பாச்சா (கட)

சரணங்கள்.

க. பணத்திலாசைபற்றும்போதுபுவிமீது பாகவதரேது
குணத்தையறியாமலீதடிக்கடிவாது கொடுக்கச்செய்ததுசூது
பிணத்தையலங்கரிக்கும் பேருக்கன்புதகாது
மணமிகும்பதகமலமகரந்தமனன கருமவிரோதியாமிந்த (கட)

உ. நரரைவணங்கிநடுங்கிப்ராணனேபோன்றும்நான்கேட்கமாட்டேன்
அரவிந்தபவபுராஹரபுரந்தராதிக ளடியில்மனதைநாட்டேன்
பரதெய்வமாமுன்னைபணிந்துபணிந்து கேட்டேன்
பாரிலுன்றிருநாமப்பாகில்பக்தனென்றுரைப்பதுமெய்யாகில் (கட)

௩. துருவனுக்குபதமளித்ததென்னபொய்யாசொல்லாயம்புதமெய்யா
பரிதிமகனுக்கும்விடணனுக்குமர்சிட்ட பங்கேருகக்கையா
திருமனுளகுலதெய்வமே யெனதையா
சின்னசாமியையாளமுந்து சீக்கிரமாகவேயோடிவந்து (கட)

வசனம்.

இந்தப்படிக்குத் துதித்துக்கொண்டிருந்தும் பகவான் கிருபைசெய்யாதிருக்கக்கண்டு வேதசாஸ்திர புராணேதிகாஸ காவ்ய ப்ரதிபாத்தியனை ஒப்பற்றகடவுள் ஸ்ரீராமனென்றும், அவனை நம்பினபேர்களுக்கு ஒரு குறைவுமில்லையென்றும், முன் அவனைநம்பி வெகுபேர்கள்கடைத்தேறினர்களென்றும், அவனுக்குக் கைங்கரியஞ்செய்தபேர்கள் அளவற்ற சம்பத்தை யடைவார்களென்றும் சொல்லுவதெல்லாம் அபத்தமாகத் தோன்றுகின்றதேயன்றி சுபத்தமல்லவென்று கலங்கி முகம்வாடி ஐயனைக்குறித்து ரிந்தாஸ் துதிசெய்தல்.

௩௯. இ-ம்-பியாகடை-தாளம்-ஆதி.

பல்லவி.

நம்பினத்திற்கு நல்லஸ்திதியில்லைவத்தாய்
நல்லகீர்த்திபெற்றாய்

அநுபல்லவி.

எம்பிரானே ஆஹா இந்தநாவிலென்னை
இம்மாத்திரஞ்செய்தாயேயிது போதும்போதுமுன்னை (நம்)

சரணங்கள்.

௧ ஆர்த்தசரண்யனென் றகத்தன்புபிரியாமல்
அனுதினமுந்துதிப்ப தறிந்திடர்பறியாமல்
கீர்த்தனங்களைக்கண்டு கிருபையாகக்குறியாமல்
கெருவங்கொண்டிருக்குங் கிருபணனென்றறியாமல் (நம்)

௨. பொதுவானதுதெய்வம் பூஜைசெய்திடநன்று
புரிந்தருளுமென்முறை பூண்டது தெரிந்தன்று
விதுரனுக்குதவிய விதமெந்தன்மீதுமின்று
விருப்பங்கொண்டுநல்ல மேன்மைதருவாயென்று (நம்)

௩. மகிமையைக்காணுத வரிதுவரையிற்சொன்ன
வார்த்தையானதுசெவி வழியாயிதயந்துன்ன
தகிக்கின்றதீதுனக்குச் சரியேமுன்னோர்சின்ன
சரமிகட்கும்பெரிய சாமியேகதியென்ன (நம்)

வசனம்.

இவ்விதம் ரிந்தாஸ் துதிசெய்து உடனே பயந்து நீயே பரனென்றும், உனைநம்பினபேருக்கு ஒருகுறையுமில்லையென்றும் உபநிடதவேதாதிகள் உரைக்கின்றவிஷயம் உண்மையாயிருக்க உள்ளந் தெளியாத நான் உன்மீது தோஷாரோபணஞ் செய்யத்தகுமோவென்று உருகி அபசாரக்ஷாமணஞ் செய்துகொள்ளுதல்.

## ௪௰. இ-ம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

நிந்தித்தேனென்றவிள்ளாதே
நெஞ்சத்தில்கோபங்கொள்ளாதே

அநுபல்லவி.

வந்தித்துவந்தித்துச் சிந்தித்துச் சிந்தித்து
சந்தித்திடாப்புந்தி மந்தித்து மந்தித்து (நிந்தி)

சரணங்கள்.

௧. எந்தனைப்பாதிக்கும் பந்தந்தனக்கஞ்சி
இந்தவகைசொன்ன துந்தனையுமிஞ்சி (நிந்தி)

௨. கைதந்தருள்மாரி பெய்தருளுமெம்மானே
வைதாலுந்தோத்திரஞ் செய்தாலுமுன்னைத்தானே (நிந்தி)

௩. குன்னமாகநெருக்குங் கின்னங்களைமாற்று
சின்னசாமியென்னு மென்னையுங்காப்பாற்று (நிந்தி)

வசனம்.

இப்படிக்கு நானாவிதபாவமாய்த் தெலுங்குகீர்த்தனம் அனேகம் பாடிக்கொண்டு பந்தீகானாவிலிருக்கும்போது பதினொருவருஷம் பதினொருமாதம் இருபத்தொன்பதுதேதியுமாக முப்பதாந்தேதி பாட்சாவிடத்திலிருந்து மறுநாள் உதயகாலத்தில் யானையின்காலா லிடறுகிறதாக வுத்திரவு வரக்கண்டு சித்தமிகத் தத்தளித்துக் கொதித்து ரகுஸத்தமனைத் துதித்திரங்குதல்.

## ௪௧. இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

௧. ரட்சிக்கவேணும் ரவிகுலகலசஜலதி
சந்திரராம சந்த்ரா
பட்சிராஜவாஹன பக்தஜனார்த்தி
தந்திரராம சந்த்ரா (ரட்சி)

௨. பனிரெண்டுவருஷம் பந்தீகானாவில்
பார்த்தும்ராக வேந்த்ரா
இனியாகிலுங்கிருபை வாராதோஙிக
ரிலாதராம சந்த்ரா (ரட்சி)

௩. ஆலாலமுண்ட காலகாலனுமைக்
கருளுந்திவ்ய நாமா
மேலானதெய்வ மென்றுநம்பினான்
வீணாக லாமா (ரட்சி)

ச. மதிலொடுகோபுர மண்டபஹேம
வாகனங்களுண் டாக்கி
அதிபணஞ்சில வழிந்திடவேர்ப்பா
டானதிந்தப் பாக்கி (ரட்சி)

ரு. பரதலட்சுமண சத்துருக்கரொடு
பவனாத்மஜன் றனக்கும்
தரணியிலிருந்தவ தாரஞ்செய்தவெங்கள்
ஜனகிதனக்கு முனக்கும் (ரட்சி)

சா. கலிகிதுராய்மணி மகுடமாரம்பதக்கங்
கவசம்புரியக் கொண்டு
குலிக்கிக்கொண்டிருப்ப தாரப்பனுடைமையோ
கூரவேணுங் கண்டு (ரட்சி)

எ. மாமன்சனகனோ டப்பன்தசரத
மகிபனனுப்பி னானோ
ராமபக்தி வீணாகாதென்றே
நவில்வது பொய்தானோ (ரட்சி)

அ. நிந்தனைசெய்திடு மகங்காரியென்று
நினைவினிற்கொள் ளாதே
இந்தப்பவக்கடலி லின்னமுமமுழ்ந்திட
வெந்தனைத்தள் ளாதே (ரட்சி)

கூ. என்னசாமியிவன் சாமிதுரோகி
யென்றடிக்கடி நல்லாய்
சின்னசாமிக ளுனக்குப்போதனை
செய்தாரோ சொல்லாய் (ரட்சி)

வசனம்.

இவ்வண்ணமுருகி அன்றையத்தினம் விஷம் சம்பாதித்து வட்டியில் வைத்துக்கொண்டு இப்பொழுது பானஞ்செய்தால் ப்ரதாகாலம் ஒருவேளை பஜனையில்லாமற் போகுமாகையால் அந்தக்காலமும் பஜித்து உடனே விஷபாணம்பண்ணிறைல் யானையின் காலாலிடறப் பாச்சா வருகிறதற்குமுன் பிராணன் போய்விடுமென்றெண்ணிப் பகவானைப் பாடி யுருகுதல்.

சஉ. இ-ம்-சஹானா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

க. தாசரதிகண்பாராயோ தமியேனுரையையேராயோ
தாசனையாளவாராயோ சங்கடங்களைத்தீராயோ

உ. இந்தநாளுஞ்சோதனையா இஷ்டஜனங்கள்போதனையா
எந்தனுளும்வாதனையா இப்படியேமனவேதனையா

௩. துதிசெய்யச்செய்யமாயமா சொல்லுனக்கிதிலா தாயமா
விதியென் றுரைப்பது நேயமா வீணுக்குவதுஞாயமா

௪. பெண்ணென்றுரைத்ததுமெய்யாச்சே பெருமானென்கிறபேர் [போச்சே
மண்ணுளவர்க்குமீதேச்சே மகிமைகளெல்லாமேற்பூச்சே

௫. துன்னுமிடர்வேர்கெல்லாயோ கழுகனுகிமுன்னில்லாயோ
சின்னசாமியென்றுபுல்லாயோ சீதைக்காவதுசொல்லாயோ

வசனம்.

இவ்வாறு உருகியழுத்துக் கொஞ்சந் திருக்கண்வளர்ந்தசமயத்தில் பத்ராசல திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற கோதை யாயும் சகல கல்யாண குணைபேதையாயும் அகில ஜகத்துற்பத்தி ஹே தூபூதையாயும் அகாதபேதையுமான சீதையென்னும்பிராட்டி கோபன் னுவினது மனவேதனையைத் தனதாகப்பாவித்து எம்பெருமானைச் சேவித்துப் புருஷகாரம்புரிதல்.

௪௩. இ-ம்-செஞ்சுருட்டி.-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எழுந்திரும்பிராணநாதா
தொழுந்தாசனுடுவாதா

அநுபல்லவி.

கொழுந்தனும்நீரும் பழுதற்றகாருண்யம்
கொண்டுகோருவதைக் கொடுப்பதன்றோகண்யம் (எழு)

சரணங்கள்.

௧. கனிந்துபனிரண்டாண்டும் காவலிலிருந்துவேண்டும்
புனிதனுகிய பூசுரனையப்போதே
போஷிக்காதகுற்றம் போகும்படியிப்போதே (எழு)

௨. எங்நாளுமென்னையம்மை யென்றுந்தந்தையென்றும்மை
அங்நாளாதியா யடுத்தவனுக்கிம்மை
யருளாதிருக்க லாமாவிதுவாசெம்மை (எழு)

௩. சாசுவதமாகியகீர்த்தி தாவுந்தயாபரமூர்த்தி
ஈசுவரனென்றும்மை யெப்படியியம்புவார்
இப்படிக்குச்செய்தா லெவர்தானம்புவார் (எழு)

௪. பக்தன்றிருவுள்ளங்களிக்கப் பாக்கியமவனுக்களிக்கச்
சித்தமகிழ்ந்திந்தச் சின்னசாமியும்நீரும்
சேவகராய்ப்பாக்கி தீரும்வகையைப்பாரும் (எழு)

வசனம்.

பிராட்டி புருஷகாரத்தால் புராரிநுதனென்றும் சராசராத்மகனென்றும் நிராகாரனென்றும் நராகாரனென்றும் தராதாரனென்றும் சுராதீசனென்றும் முராராதியென்றும் கராராதியென்றும் துராராத்தியனென்றும் புகழப்படும் இராமமூர்த்தியும், துர்க்குண கணபூரித குணபாசன சிக்ஷண விசக்ஷண சுபலக்ஷண லட்சுமணமூர்த்தியும் தேவரும் காவலரும் கேவலரும் நாவலரும்மேவரிய சேவகவேஷந் தரித்தல்

௪௪. இ-ம்-சஹானா-தாளம்-ஆதி.

பல்லவி.

சேவகவேஷம் பூண்டாரே
சேவகருரையைத் தாண்டாரே

அநுபல்லவி.

பாவமலைந் துநிர்ப் பந்தத்திலனுத்த
பாகவதனுக்காகப் பணங்களைச்செலுத்த (சேவ)

சரணங்கள்.

௧. திருமண்சூரண மலங்கரித்து
திருவுளத்தி லருளினைவரித்து
சருமகடாரி கத்தியும்பரித்து
ஜல்லடமங்கி நிஜார்தரித்து
இருவர்க்குமிருமையு மீந்திடஸ்மரித்து
திருமகள்மொழிகளைச் செவிகொண்டுசிரித்து (சேவ)

௨. தலைப்பாகையின்மீ துருமாலும்
தாங்கிடில்லிபதி யொருக்காலும்
கலைப்பார்சொல்லுமுரை யொருபீலும்
கறவாப்பசுவென்று மென்மேலும்
அலையாமனத்துட னறியாதிருந்தாலும்
மலைநிலைக்கேதுவென்று மனங்கொண்டதுபோலும் (சேவ)

௩. மாசறுமுனிவர்கள் துதிபேச
வன்னியும்பாஸ் கரனுங்கூச
தேசமெங்குமிவ ராளிமூச
திருமேனியின்பரி மளம்வீச
நேசரிதரப்ரபு நிசயத்தையேச
தாசரதிகள்பத்ரா சலராமதாச (சேவ)

௪. அன்னவாகன னபிராமியும்
அயனுமரனுஞ் சிவகாமியும்
பன்னுமிந்திரன் பௌலோமியும்
பாஞ்சசன்னியமும் நேமியும்
இன்னமுள்ளசீவர்க்கு மிருப்பாம்பூமியும்
துன்னுஞ்சின்னசாமியுந் துரைபெரியசாமியும் (சேவ)

வசனம்.

இவ்வகை குணபூஷண பவசோஷண மிருதுபாஷணராய் இவர் சேவகவேஷங்கொண்டு தானேஷனது அந்தப்புரத்தின் ஏழுப்பரிகை கதவுகளும் தாமே திறந்துக்கொள்ளச்செய்து நேராய் அங்கிருந்த சூராதிசூர வீராதிவீர பாராகாரருக்குத் தரிசனங்கொடாமல் ஸௌத ஸோபானாரோஹணஞ் செய்யக்கண்டு அணிமிகுமணிமய ஹம்சதூளி காதல்பத்தில் பாட்சாவின் அருகில் சயனித்துக்கொண்டிருந்த சதியாகிய மதியென்பவள் கோஷாவிலிருக்கும் யோஷாவாகையால் எழுந்து மறைவிலிருந்து பார்த்தாச்சரியங்கொண்டு மாச்சரியம்விண்டு இந்தச் சூரர்களால் கர்த்தாவான பர்த்தாவுக்குச் சங்கடம் ஜனிக்கிறதாகவிருந்தால் அப்போது ஆபத்துக்குப் பாபமில்லையென்று பொன்னடிகளைப் பற்றி வணங்கலாமென்கிற பத்தியோடும் கூடிப்பார்த்தும் பரமாநந்தமொத்திருக்க ஸ்ரீராமலட்சுமணர்கள் பாட்சாவினது முதுகைத்தட்டியெழுப்பி யருளிச்செய்யல்.

௫௯. இ-ம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தாரும் டில்லிபதியே
என்னபாக்கிசொல்லும் பூபதியே

அநுபல்லவி.

அந்தோகம் கோபன்னாவின்குணம்
அறியாதவர்நீ ராகையினாற்பணம் (இந்)

சரணங்கள்.

க. ஈராறுவருஷங் காவலிலே
இருக்கச்செய்தீர்பொரு ளாவலிலே
நேராய்ஜவான்க ளேவலிலே
நிரதமாயவரை மேவலிலே
நாராயணனே நண்ணித்தனத்தைத்தரும்
பாராயணபலம் பாருமெழுந்திரும் (இந்)

௨. வீணரிவரென்றெண்ணங் கொள்ளாமல்
விளங்குமெங்களுரையைத் தள்ளாமல்
மாணறிந்துமவரை விள்ளாமல்
மறுபடியுஞ்சேவகர் துள்ளாமல்
காணக்காணமனங் களித்தனுவலைக்கொடும்
நாணயங்களைக்கண்டு ரசிதுகொடுத்திடும் (இந்)

௩. வணக்கமாகவிளக் கேர்க்கச்சொல்லும்
வளம்பெறத்தைலத்தை வார்க்கச்சொல்லும்



ராமலக்ஷ்மணர் சேவகவேடம்பூண்டு
தானீஷாவிடம் வருதல்.

தானீஷா கோபன்னவிடம்
வந்து வணங்குதல்

கணக்கையும்நன்றுய்ப் பார்க்கச்சொல்லும்
கஜானுவிலிதைச் சேர்க்கச்சொல்லும்
இணக்கமாகஸன்ன தெழுதச்சொல்லுமிதக்கம்
குணமாகுஞ்சின்னசாமி கொடுத்தனுப்பியரொக்கம் (இங்)

வசனம்.

இவ்வண்ணம் இராமலட்சுமணர்க ளியம்பிய திருமொழிகளைக் கேட்டெழுந்து அருகிற் சயனித்திருந்த பத்தினியைத் திரும்பிப்பார்க்க அச்சங்கொண்டு இவரொளியிச்சங்கண்டு வியந்துடன் பயந்து நயந்து கேட்குதல்

௪௬. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தராத்திரியி லிங்கென்னகாரிய
மெவரையா நீங்கள்
அந்தராமதாசர் சேவகரவ
ரனுப்பவந்தோம் நாங்கள்
சுபநயனரேகுல மதமுறவின்னதென்று
சுருக்காய்ச்சொல் வீரே
தபனகுலமிரா மா நாஜமதமண்ணன்
தம்பிகளென் றீரே
காமனைமிஞ்சு மழகராகுமுங்களது
நாமங்களுரைப் பீரே
ராமசிங்குலட்சுமண சிங்கென்றுகுரு
நாதனிட்ட பேரே
ஸ்ரீமந்தரேயுமக்குச் செல்வம்வந்த
சேதிநன்று யோதும்
மாமன்கொடுத்த ஸ்ரீதனமன்றி
மற்றுமில்லை யாதும்
நிம்பளமாய்ச் சீவன்நடக்கிறதா
நிஜமாக வியம்பும்
சம்பளமெங்களுக்கு வேறொன்றுமில்லைப்ர
சாதமிதனை நம்பும்
இதுவரையிலும்நான் கண்டதுங்கேட்டது
மில்லையுங்கள் சொல்லை
சததமும்வீட்டினி லிருப்பவர்வெளியினில்
சஞ்சரிப்ப தில்லை

நிலையாயெத்தனை நாளாய்ச்சேவகம்
நீங்கள்சொல்ல வேணும்
தலைமறைதலைமறையா யடிமைநாங்கள்
சத்தியமிது காணும்
இருங்களுங்கள்மாதரி வேறாகம்பளத்தினி
லிரண்டு பேரும்
இருக்கிறோமெங்கும் போகிறதில்லைபண
மெல்லாமிந் தாரும்
என்றுசொல்லிகுலத்தி னுடுபுரோகுகிழித்
தெழுதும்படிக்குப் பேசி
நின்றுதம்பலமுமிழ்ந்தக்கணமே
நிகநிகவெனுந்தன ராசி
தந்தேயொப்பவித்து ராம்ராமென்றுரை
சாற்றியுத்தரம் பெற்று
பந்தேகாணுவிலடிமை படுத்திருக்கும்
படுக்கையின்கீழ் வைத்து
அருகிருந்தவிஷை வட்டிலைவிட்டெறிந்
தானந்தித்தொருக் காலே
பெரியசாமியும் சின்னசாமியும்சீதையொடு
பேசினார்பரி வாலே

வசனம்.

இவ்விதம் இராமலக்ஷ்மணர்கள் பத்ராசலம்வந்து சேர்ந்தபின்பு முன் பாட்சாவிடத்திற் செலுத்திய பதினாயிரம் ராமடங்கியி லொன்று மில்லாமல் மறையக்கண்டவன் மிகவுங் கோபங்கொண்டு இதென்ன அனியாயமாயிருக்கின்றது அந்தக் கோபன்னவை சூரியோதயகாலத் தில் யானையின் காலாலிடறுகிறதே சரியென்றுசொன்ன வார்த்தை யைக்கேட்டு அவனது பத்தினியருகில்வந்து பர்த்தாவைப் பார்த்துச் சொல்லுதல்.

௬௭. இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொன்னதென்னதெரியாதா

அநுபல்லவி.

நன்னயமாக சங்நிதிநின்று
ராமசிங்கு லக்ஷ்மணசிங்கென்று (சொன்)

சரணங்கள்.

௧. ஆதவகுல மோதனமேசம்பளம்
அண்ணனநுஜனென் றெண்ணுமென்றவரதுவளம் (சொன்)

௨. பாதிநிசியிற் பாராகடந்தாரே
பத்ராசலமிடம் பாருமென்றனேரே (சொன்)

௩. கந்தர்ப்பகோடி சுந்தராங்கர்
கம்பீரமாகக் கருணாபாங்கர் (சொன்)

௪. ஸ்ரீ தனமென்பது சீதா
தேவிமூலமிதுகுதாடில்லிபுர நாதா (சொன்)

௫. சின்னசாமி சேவகராகிமுந்து
தேஜோரா சிகளாகவந்து (சொன்)

வசனம்.

இவ்விதமந்த உத்தமிசொல்லத் தக்ஷணம் மறைந்திருந்த பொருளை முன்போலவே கண்டுதெளிந்து ஆலோசனைசெய்து பத்தினியைப் பார்த்து இனி யான்செய்யவேண்டுவது என்னவென்று தாகேஷா வினவ, வேறென்னவிருக்கின்றது உதயகாலத்தில் ஸ்நானம் பண்ணி பரிசுத்தமாய் வேறு ரசிதெழுதிக்கொண்டு பரிவாரங்களோடு கோபன்னாவிடம்போய் வணங்கிக்கொடுத்து இராஜ்ஜியத்தையும் ஒப்புவித்து அவர்கொடுப்பதைவாங்கிச் சீவனம் செய்கிறதே நலமென்று பலவிதம் சொல்லுதல்.

௪அ. இ-ம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்வார்த்தையைக் கேளும்
எங்காளுமரசை யாளும்

அநுபல்லவி.

முன்வார்த்தையை முனிந்திந்தச்சோக
மோகமும்மைவிட்டுப் போகப்பரிவாக (என்)

சரணங்கள்.

௧. நிலமுமவரதுமா தங்க
நிசயதரங்காதிசது ரங்க
பலமுமவரதென்றுந் துங்க
பாக்கியந்தந்தின்பம் பொங்க
வலமுஞ்செய்து வணங்கி
மமகாரமது பிணங்கிக்
குலமுய்வண்ண முணங்கி
கூறுங்கொஞ்ச பிணங்கி (என்)

௨. தலத்திலுயர்ந்தது பத்ரா
சலமென்றுகண்டல ருத்ரா
நலவிதிகள் துதித்து முத்ரா
ரசத்தையறிந்து நித்ரா

குலமொன்று மில்லாமல்
குதிர்ந்ததைப் புல்லாமல்
சலங்கொண்டே நில்லாமல்
தடுத்தொன்றுஞ் சொல்லாமல் (என்)

௩. பலபேர்பலவித கலகம்
பண்ணுவதுகரதலா மலகம்
நலந்தராதவலமென் றுலகம்
நவிலும்வார்த்தை திலகம்
சிலவழிந்ததை யெண்ணமல்
சின்னசாமி நண்ணமல்
அலமென்றே புண்ணமல்
ஆலோசனை பண்ணமல் (என்)

வசனம்.

அப்படியே உதயகாலத்தில் உத்தியோகஸ்தர்களை வரவழைத்துக் கோபன்னவுக்கும் பதிலாகயிருந்த சுபேதாரனுக்கு பர்தரப்தாகீதும் அந்தக் கச்சேரியிலிருக்கும் உத்தியோகஸ்தரெல்லோரும் கோபன்னவின் யாக்கினைப்படிக்கு நடக்கும்படி வெவ்வேறு தாகீதுகளும் கோபன்னபேருக்கு சுபாஜாரிதாகீதும் எழுதியனுப்பிவிட்டு தான் வேறுரசிது தயார்செய்துக்கொ.ண்டு பரிவாரங்களோடு புறப்பட்டு பத்ராசலம் சமீபம் வந்துகொண்டிருக்க இங்கே கோபன்ன ப்ராதகாலத்தில் எழுந்திருந்து விஷவட்டிலைக்காணமல் மெலிந்து நலிந்து ஸ்ரீரகுநந்தன! விஷபானஞ்செய்து மானத்தோடு யான் பிராணபரித்யாகம்செய்வது உனக்கு அசம்மதமாச்சுதன்றோ? அடியேன் விஷயத்தில் நல்லகீர்த்தி சம்பாதித்தாயென்றசொல்லி வெறுத்துக் கொண்டு வந்து கோதாவரியில் ஸ்நானம்செய்து நித்யகருமத்தை நிறைவேற்றிக்கொண்டு கரையேற்றி பவக்கடலிலிருந்து பக்தஜனங்களைக் கரையேற்றும் பத்ராசலவாசியான பகவானைநோக்கிப் பாடுதல்.

௪௧. இ-ம்-கன்னடா-இந்துஸ்தான்காபி-தாளம்-ஆதி.

தங்கநாமாவளிச்சிந்து.

௧. பொன்னடிகதியென்று சொன்னவனயிருக்க
இன்னமிலையலாமா ராமா இப்படிச்செய்யப்போமோ

௨. கும்பிட்டுக்கொண்டாடி நம்பினதென்னமனம்
வெம்பியலைந்துபோகவா ராகவா விருப்பமும்வீணகவா

௩. பொல்லாமனமடங்கச் சொல்லாமலிருப்பதேன்
எல்லாருங்கண்டேசவா கேசவா இவ்வகைதினம்பேசவா

௪. பாதிக்கும்பந்தமதைப் பேதிக்காதிருப்பதேன்
ஆதிமூலகாரண நாரண ஆனந்தபரிபூரண

ரு. எப்படியுரைத்தாலும் அப்படிப்புரியாமல்
இப்படிச்செய்தாலேதவா மாதவா எந்தனுக்கிதோதவா

சு. செப்பியமொழிகளில் தப்பிதமிருந்தாலும்
ஒப்பியாளப்பாவிந்தா கோவிந்தா உளங்குடிவாதாவிந்தா

எ. தாந்தஜனகஜா காந்தமஹாந்தாசு
ஸாந்தஸர்வஸஹிஷ்ணுவே விஷ்ணுவே ஸர்வேசப்ராஜிஷ்ணுவே

அ. அந்நாளுமிந்நாளும் எந்நாளுமென்னையாள
மன்னுமதுசூதனை ஸாதனை மாயகுணபேதனை

கூ. பொய்யாமிந்தஜகத்தை மெய்யானதென்றெண்ணச்
செய்யாதேதிரிவிக்ரம அக்ரம சேதனஜனதிக்ரம

கO. நயங்காட்டுமருவை குயங்கண்முகத்தைக்கண்டு
மயங்கச்செய்யாதேவாமனை பூமனை மருவில்லாதநேமனை

கக. ஆதராதிசயத்தோடு பாதராயணிடாணியும்
நாதராதாலோலஸ்ரீதரா நீதரா நலமுண்டோபாலசோதரா

கஉ. உனையன்றிவேறுதெய்வம் தனையறியேனையா
எனையாளிருடிகேசனே நேசனே இதயகமலவாசனே

கங. சிவனுதிதேவரோ டெவரையுந்தந்தகஞ்ச
பவன்வந்தபத்மநாபனே தீபனே பகரொண்ணாதப்ரதாபனே

கச. மாமோதந்தாராமல்நீ மோசஞ்செய்யலாமோ
தாமோதரமுகுந்தனே நந்தனே ஸத்தியவைகுந்தனே

கரு. நாமத்தைநம்பினவர் காமமடங்கநல்ல
க்ஷேமந்தரும்பாஷணை பூஷணை சின்னசாமிதாசபோஷணை

வசனம்.

இவ்வாறு முறையிட்டுப் பணமுனக் கர்ப்பணமாச்சுதென்றும் ப்ராம்ஹணனென்று மஞ்சாமற் பாதிக்கத்தொடங்கும் பாட்சாமுதல் பாரஸம்சார பாராவார மக்னர்களாகிய ஜனங்கள் என்னமாயுஜ்ஜீவிப்பார்களென்று ஜீவகாருண்யத்தால் ஐயனைக்கேட்பதுபோல் உரைத்தல்.

ருO. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

அகப்பட்டஜனங்களுக் கென்னகதி
சுகப்படவழிசொல்லுஞ் சீதாபதி

அநுபல்லவி.

நிகமகோசரனை நின்னையறிந்துநிலையில்
நிற்காமல்மனந் திக்குத்திக்காயலையவலையில் (அகப்)

சரணங்கள்.

க. அனைத்துலகிலுமுள்ள தங்கத்திலே
அநாமரூபனென்றந்த ரங்கத்திலே
நினைத்துவிடுபடாமற் றங்கத்திலே
நிலத்திலேபற்றிமாத ரங்கத்திலே

புனைந்திதேசுகமென்று போகிக்கும்பொங்கத்திலே
தனைமறந்தசத்தான ஸம்ஸாரபங்கத்திலே (அகப்)

௨. நிகரில்லாதபரந் தாமத்திலே
நிச்சயமதிகொண்டு நேமத்திலே
அகளங்கராயுனது நாமத்திலே
அன்பொடுநிறைந்த க்ஷேமத்திலே
சகலமென்றிராமல் தாமஸதூமத்திலே
ஜெகத்தையேநிஜமென்று தெரிவிக்குங்காமத்திலே (அகப்)

௩. சொன்னவகைசெய்யாமற் பாபத்திலே
துணிந்தடிக்கடிமனஸ் தாபத்திலே
வன்னமலரடிபெரியோர் சாபத்திலே
மதிமயங்கித்தயங்கிச் சூபத்திலே
அன்னத்திலேபூபத்திலே யாசையடைந்தாபத்திலே
என்னசெய்வோமென்றலைந்து சின்னசாமிகோபத்திலே (அகப்)

விருத்தம்.

கரைந்துளமிந்தவண்ண
முரைத்தகோபன்னன்றன்னை
விரைவினிலாவராம
துரையினைத்துதிக்கின்றாரே

௫௧. இ-ம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

துரையேயென்னையாளச் சொன்னேன்
சொன்னேன் சொன்னேன்

அநுபல்லவி.

அரைக்கணமுமோயாம லூர்தன்மேலே
யாசையதிக மாகையினாலே (துரை)

சரணங்கள்.

௧. நிர்க்குணநிர்மலஞான நிதியாகிஜகத்திற்குநிதான
பற்குணங்களுக்காதாரமோன பதிதனுகிப்பரிபூரணனை (துரை)

௨. தினமிப்படியுந்தனைச்சிந் தனைசெய்திடுமெந்தனைவஞ்
சனைசெய்திடமாட்டாயெனவுன்சரணமடைந்தேனிப்பொழுதென் ()

௩. மாரவேளையீன்றிடுமணி வண்ணமலர்க்கண்ணபிணி
தீரக்கஞ்சவடிமுடியணி சின்னசாமிதினந்தொழும்பணி (துரை)

மணிப்ரவாள பஞ்சரத்னம்

பூமண்டலாதிபரி ரைஞ்சுமடிகோகனத பூபாலதசரதேந்த்ரன்
புனிதனுங்கலைக்கோட்டு பூதேவனுற்செய்த புத்ரகாமேஷ்டிதன்னில்
காமசதகோடிசுந் தரமுமாயிரகோடி கதிரவனைமிஞ்சுமொளியும்
கமலமாமலர்பூர்த்த காளமுகிலொத்துமிக் காசினிதழைக்கவந்த

ராமகல்யாணகுண தாமமங்களநாம ராஜீவதளலோசனு
ராகேந்துநிபவதன ஸாகேதபுரசதன நாகேசவந்திதபதா
ஸாமகானவிலோல கோபாலவனமால தரவரதயாலவாலா
சரணாகதத்ராண பாராயணாம்போஜ சரணகருணாபரணனே. (௧)

அத்திகோனன்றுதி மூலமென்றோதகண் டபயமீந்தாட்கொண்டனை
அமலகமலப்பாத ரேணுவாலருவையா மகலிகைக்கருள்செய்தனை
கத்தியதுரோபதையி னிடரகற்றினை துருவர் கனகவரையுறச்செய்தனை
கர்த்தனேயுனைநம்பிக் கடனிலும்பிணியிலும் கஷ்டமெய்திடனியாய [மோ
நித்தியநிர்மலநிராமய நிரஞ்சனவரத நிரதமங்களகுணகனு
நீலகந்தரசாப கண்டனும்புதிசயன நிர்வாணபததாயகா
ஸத்யஸ்வரூபநிஷ் பாபப்ரதாபசீ தாவதனவனஜமித்ரா
சரணாகதத்ராண பாராயணாம்போஜ சரணகருணாபரணனே. (௨)

நீலமணியனையதிரு மேனியெழிலுந்திகழு நிசிநாதபிம்பமுகமும்
நிகரிலாமார்புமிரு முளரிகரமும்ஜலஜ நேத்திரக்கடைப்பார்வையும்
ஆலமுண்டவனன்ன வாகனுகண்டலனு மறியாதகமலபதமும் [ரமே
அன்புடனேதரிசனந் தந்துபிணிதீர்த்தென்னை யாட்கொள்வதுன்பா
பாலபாஸ்கரகோடி ஸமசேலஸரஜால பக்தஜனஸம்ரக்ஷகா
பதிதபாவனநாம பணிபூஷணப்ரேம பரமபட்டாபிராமா
சாலபேதனசண்ட கோதண்டசாபதர சனகாதிமுனிசந்நுதா
சரணாகதத்ராண பாராயணாம்போஜ சாணகருணாபரணனே. (௩)

சுந்தரமிகுந்தநின தாகமேயென்விழித் துணைநோக்கவாயுன்னையே
சொல்லநின்காதையே செவியினவநின்பதத் தளபமேநாசிமுகர
மந்தராசலமேந்தி யின்பமுடனன்பரெனு வானவர்க்கமுதமீந்த
மாயனேகரிவரத ராயனேசெம்பவள வாயனேவாமருளுவாய்
இந்த்ராதிசுரமகுட ரஞ்சிதபதாம்போஜ இக்ஷ்வாகுகுலநந்தனு
ஈசலோகேசகந் தர்வசாரணகின்ன ரேசசம்பூஜ்யராம
சந்த்ரமுகசந்த்ரரவி வம்சபாராவார சந்த்ரதாசானுகூலா
சரணாகதத்ராண பாராயணாம்போஜ சரணகருணாபரணனே. (௪)

வன்னமணியாசனந் தன்னிலெவருங்காண வாயுராசன்றநயனோர்
வாரிஜபதந்தாங்க வைதேகியெனதன்னை வாமபாகத்திருக்கச் [ன்
சின்னவர்கள்மூவரொ டெழுந்தருளுமையனே சின்னசாமியெனுமடியே
செய்தபஞ்சகமணி ப்ரவாளமிதனைநின் செவிகொண்டுகேட்டருளு
பன்னகாதிபசயன பங்கஜோபமநயன பன்னகாசனவாஹனு [வாய்
பரமபதநாயகா பீஷ்டவரதாயக பார்த்திவேந்த்ராதிபப்ர
சன்னராகவதயா ளோபரமபுருஷவர சச்சிதானந்தரூபா
சரணாகதத்ராண பாராயணாம்போஜ சரணகருணாபரணனே. (௫)

வசனம்.

என்று பாடிக்கொண் டிருக்கும்போது கொஞ்சதூரத்தில் பரிவாரங்களோடு பாட்சாவருவதைக்கண்டு யானையின்காலாலிடற வருகிறானென்றெண்ணிக் கலக்கங்கொண்டிருந்த சமயத்தில் கச்சேரி உத்தி

யோகஸ்தர்கள்வந்து வணங்கிக் கைகூப்பிநிற்க பங்கேதகானு வேலைக்காரி இவர் படுக்கையின் கீழிருந்த பரிமளம்பொருந்திய ரசீதைக் கோபன்னு வின் கையிற் கொடுக்கப் பார்த்து ஆர்த்தியடைந்து பாட்சாவாகிய தானேஷனுக்குத் தரிசனங்கொடுத்துப் பணத்தைச் செலுத்திவந்த நீ பயப்படாதேயென்று பகரக்கூடாத பாவி யானிருந்தென்ன பிரயோ சனமென்று பக்கத்திலிருந்த சேவகனது கத்தியை பலாத்காரமாய் வாங்கித் தனது கழுத்தைக் குறித்து நோக்கும்போது இராத்திரி கொண்ட வேஷங்கொண்டு ஸ்ரீராமலட்சுமணர்கள் கத்தியினடிநுனி களைப்பிடித்துவாங்கி அந்தச்சேவகன் கையிற்கொடுத்து கோபன்னுவுக் கும் அங்கிருந்து எல்லாருக்குந் தரிசனங்கொடுத்து மறையும்போது கோபன்னு மிகவும் களிப்புற்று ஐயனை யெங்குமிருக்கின்றவனுகப் பார்த் தானந்தித்தல்.

நிஉ. இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்குமிருக்கிறு னய்யன்
என்னையாட்கொண்ட மெய்யன்

அநுபல்லவி.

சங்குசக்ர தரனுகித்தங்கும்
ஜகமீரேழு தலத்திலங்குமிங்கும் (எங்)

சரணங்கள்.

பஞ்சபூத பஞ்சதன்மாத்ரகோச
பஞ்சேந்திரி யங்களிடத்திலுமீச
கஞ்சபவ கஞ்சமித்ராமித்ரபாச
காசுரேச தனேசகிரீச
குஞ்சரமுக புஞ்சத்திலும்
குகனுள்ளக் கஞ்சத்திலும்
செஞ்சொலதி கொஞ்சத்திலும்
சின்னசாமி நெஞ்சத்திலும் (எங்)

வசனம்.

இவ்விதம் இராமதாசர் ஆநந்தித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் பாட்சா பாதசாரியைக் கொஞ்சதூரத்திலிருந்து சொல்லிக்கொண்டு வருதல்.

நிந. இ-ம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சலாமையா சலாம்
சலாமையா சலாம்

அநுபல்லவி.

பலாமொராட னிலாதெலாம்
பண்ணினுனென்று கோபமோகுலாம் (சலாம்)

சரணங்கள்.

வரங்கொடுக்குந்தெய்   வமதமலாம்
தரங்கமாக   ஸாமிக்கோரிலாம்
குரங்க   தரனைப்போலதலாம்
குதோமென்   ருடலாம்
புரங்களுடனே நீளும்   பூமியுமக்குத்தாளும்
திரங்கொண்டிடைதக்கேளும்   சின்னசாமிநீராளும் (சலாம்)

வசனம்.

இவ்வித மரியாதை செய்துக்கொண் டருகில்வந்த தாநேஷா பய பக்தியுடன் தான்கொண்டுவந்த ரசீதை யிவரிடங்கொடுத்தல்

௫௪. இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ராமதாசமேர   வாரும்
ரசீதிந்   தாரும்

அநுபல்லவி.

காமகோடி   சுந்தராமல
கமலக்கண்ணரை ஹிருதயகமலத்திற் கொண்டவிமல   (ரா)

சரணங்கள்.

க. மாமேருஸமதீரரிந்து   வதனராகியஸதயருகந்து
தாமேயங்குதனத்தைத்தந்து   தக்ஷணமிங்குவந்து
ஸ்ரீமேவியபத்ராசல   தேசத்தினிலேநிர்மல
பூமேவியவட்குச்சொல   புகுந்தாரையாரவிகுல (ரா)

உ. நீசரிலும்நீசனைப்போலே   நிர்மலரென்றுமென்மேலே
நேசங்கொள்ளாமலொருக்காலே   நிர்ப்பந்தித்ததனுலே
மோசம்வாராமற்பத   முளரியடுத்தேன் தூர்மத
வாசனைவிடுத்தேன்சதசத   வந்தனஞ்செய்தேனத்புத (ரா)

ங. நிமிஷமுந்தேகவியாபாரம்   நீங்காததனுற்கோரம்
றமியேன்செய்தவபசாரம்   சஹிக்கக்கூடாதபாரம்
க்ஷமித்தருளுவதேதீரம்   ஸஜ்ஜனங்களுக்கலங்காரம்
திமிரந்தனையிந்நேரம்   சேதிப்பதுமதுபாரம் (ரா)

ச. ஜெகதீசுவரனவதாரம்   திகழுந்திவ்யகுணவிஸ்தாரம்
அகத்தினில்கொள்ளுங்கம்பீரம்   அடியார்களுதாரம்
சுககரமாமென்றதுன்ன   சூக்ஷ்மமறிந்தவர்சொன்ன
சகலமுந்தெரிந்தசின்னசாமி   யுமக்குச்சொல்வதென்ன (ரா)

வசனம்.

என்று சொல்லி யிராச்சியத்தை ஒப்பவித்ததைக்கண்டு சந்தோஷங்கொண்டு இராச்சியமுழுதும் எனக்கேதுக்கு? ஆளவும் என்னுலாகாதாகையால் இந்தப் பத்ராசல தாலூக்காவை மாத்திரம் பகவதர்ப் பணமாய்க் கொடுத்தாற் போதுமென்றுகேட்க, அப்படியே கொடு



ஸ்ரீராமதாசர் தானீஷாவுக்கு ஸ்ரீராமருடைய தரிசனம் காட்டுதல்.



ஸ்ரீராமதாசர் விமானத்தின்மீது பரமபதத்திற்குப்போதல்.

த்து ப்ரமஹோற்சவகாலத்தில் சீதாராம கல்யாணத்தன்று பிராட்டிக்கு வரிசைமுதலானது தாங்கள் வம்சபாரம்பரியமாய் கொண்டுவந்து சமர்ப்பிக்கும்படியாயும் தாங்கள் பெண்வீட்டுக்காரரென்றும் இவர் பிள்ளைவீட்டுக்காரனென்றும்வழங்கும்படிக்கும் வரம்பெற்றுக்கொண்டு பாட்சா இருப்பிடம் போய்ச்சேர அந்தத் தாலூக்காவில் உற்பத்தியாகும் இருபதினாயிரம் வராகனையும் எம்பொருமானுக்கு தஸ்தீக்காக யேற்படுத்திப் பரமானந்தங் கொண்டிருக்கும்போது கோபன்னாவைக் காத்த விஷயத்தில் பத்ராசலவாசியே கிருபாசமுத்திரரென்று பரம ஸாதுக்களும் யேனையோருமாகிய சகல புருஷர்களும் ஒன்றுகூடிச் சுகோஷமாக தேவதேவேசனுக்குச் சுபமங்களம் பாடுதல்.

## மங்களம்.

௫௫. இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்களங்களைப் பாடுவோம்-நா
மங்களங்களைக்கொண் டாடுவோம்

அநுபல்லவி.

பங்கஜபத பக்தனாகிய
பத்ரகிரிராம பத்ரனுக்குஜய (மங்கள)

சரணங்கள்.

௧. அங்கஜகோடிலாவண்யனென்றும் அகிலதேவாக்ரகண்யனென்றும்
புங்கவர்புகழும் புண்ணியனென்றும் புரந்தராதிஸரண்யரென்றும்
வங்கவரையானுமைக்குச்சொல்லிய வரதனாகியவரதற்குச்சுப (மங்)

௨. தங்கமலைநிகர் தீரனுக்கு தசரதசுகுமாரனுக்கு
சங்கையில்லாவில்வீரனுக்கு சமரிலதிகசூரனுக்கு
பிங்களவசனபெருமானுக்குகம் பீரநல்லுதாரனுக்கனிஸம் (மங்)

௩. ராமதாசரிடர் தீரவே நல்லசெல்வங்களுஞ் சேரவே
க்ஷேமமிகும்படியூரவே தீவினையனைத்துஞ் சோரவே
தாமமருளிய தயாநிதிக்கு ஸாரஸதரனாம்ரகுபதிக்கு (மங்)

௪. கங்கையுதித்திடும்பாதனுக்கு கரையில்லாதமோதனுக்கு
நங்கைமணிசிதைநாதனுக்கு நண்ணுமகாதபோதனுக்கு
செங்கமலப்பதம்சிரம்வைத்தசத்யதேவனுக்குமகாநுபாவனுக்குநித்ய()

௫. எங்கும்புகழும்ப்ரசித்தனுக்கு எந்நாளும்பரிசுத்தனுக்கு
தங்குமிங்கங்கும்ப்ரபுத்தனுக்கு சந்ததமும்ப்ரமத்தனுக்கு
செங்கமலமங்கைசேரும்பதிக்கு சின்னசாமிதுதியுன்னதமதிக்கு (மங்)

வசனம்.

இவ்வாறு மதபேதமேயின்றி புருஷர்கள் கொண்டாடிக்கொண்டிருந்ததுமன்றி பெண்களும் அங்கங்குக் கும்புகூடி ஸர்வலோகேசனாகிய ஐயனுக்குச் சோபனம் பாடுதல்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இராமாயணக் கும்மி.

இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

கும்மியடிபெண்ணே கும்மியடிஅரி
குணங்களைச்சொல்லி கும்மியடி
நம்மையாளும் சீதாராமனை
நாடிப்பாடிக் கும்மியடி. (௧)

மாதமும்மாரி மழைபொழிய
வஸ்துவனைத்துஞ் செழித்தோங்கும்
கோசலமென்னுந் தேசத்திலேமிகு
கோமளசரயு தீரத்திலே. (௨)

வாசமலர்மடந்தை யருள்பெற்று
மன்னும்பனிரண்டீ ரொண்ணரையாம்
யோசனைநீள மகலமாகும்அ
யோத்தியென்று சிறந்தோங்கும். (௩)

ராஜதானியை தசரதமஹா
ராஜனாண்டு வருகையிலே
ஈசனிருடி கேசனடியே
யெல்லோருந் தொழுதேத்தவே. (௪)

தருமந்தழைக்க வர்ணாச்சிரமந்
தப்பாதவ ரவர்க்குரிய
கருயங்களை ஜனங்களநுஷ்டித்து
களித்துவாழுங் காலத்திலே. (௫)

சந்தானார்த்தந் துரகமேதத்தை
சாந்தாதேவி சமேதமுனி
வந்தானபின் வசிஷ்டமுனிவனும்
மன்னன்மகிழ நிறைவேற்ற. (௬)

வரமாகிய பகவந்நாம
மதுரத்திற்குச் சமமான
பரமான்னத்தை யாகபுருஷன்
பாங்காகக்கையி லேந்திவர. (௭)

பார்த்திவேந்திர னவனைப்பார்த்துப்
பணிந்தெழுந்ததை வாங்கிக்கொண்டு
பூர்த்தியான மனதொடுகுல
புரோகித னனுக்கிரகிக்க. (௮)

கீர்த்திமிகுந்த கோசலைக்குங்கை
கேயிக்கும்பாதி பாதிதர
ஆர்த்தியடைந்த சுமித்திரைக்கண்
டவளுமிவளும் பாதிதர. (௯)

பத்தினிகள்பர மாநந்தமடைந்து
பரிபூரணகர்ப்பந் தரிக்க
சித்திரைமாசந் தவளநவமி
செழிக்குங்கடக புனர்வசுவில். (௧௦)

மங்களகோஷ மெங்குமுழங்க
மரஞ்செடிகள் தழைத்திருக்க
கங்கைமுத லெல்லாந்தெளிய
கற்பகத்தரு மலர்சொரிய. (௧௧)

அந்தர துந்துமி யிந்திரனடிக்க
அவனிதுந்துமி யும்முழங்க
திந்திமியென்னும் வாத்யகோஷம்
தேசமெல்லாம் பூரிக்க. (௧௨)

ஜீவசந்திர யோகத்திலவர்
திகழ்ந்துச்சத்தி லிருக்கையிலே
தேவரூபிணி கோசலைதேவி
தேஜோராசி யென்றுகாண. (௧௩)

அநந்தகோடி யண்டங்களையனு
வாயுள்ளடக்கிக் கொண்டிருக்கும்
அநந்தசயனனம் புஜநயன
னவதரித்தான் சோபனமே. (௧௪)

அந்தவேளை மந்தநகையோ
டருமரதக வண்ணராய்த்
தந்தகாந்தி யனந்தகோடி
சந்திரகிரணம் போலிலங்க. (௧௫)

சங்கசக்ர கதாபத்பம்
சார்ங்ககட்கங் களைத்தரித்துத்
தங்கவஸ்திரந் தரித்துக்கொண்டு
சதுர்ப்புஜராய்க் குண்டலமும். (௧௬)

அங்கதகிரீ டங்களுமணி
யரைஞாணும் கௌஸ்துபமும்
பங்கயபதங்களிற் றண்டைகளும்
பளபளெனத் தரித்துகொண்டு. (௧௭)

எங்களாண்டவன் வந்ததைக்கண்
டெழுந்தாநந்தக் கண்ணீர்பெருக
மங்களபுளகாங்கிதத்தோடு
வணங்கியஞ்சலி செய்துகொண்டு. (௧௮)

அன்னையான கோசலைபர
　மானந்தக்கூத் தாடிக்கொண்டு
என்னையுனது மாயையனுகா
　திருக்கவரந் தரவேணும். (கக)

உனதுவயிற்றி லகிலஜகத்து
　மோரணுவாகி யிருக்க
என்றுவயிற்றி லிருந்துவந்த
　தென்னபுதுமை சொல்லுமையா. (உ0)

பக்தபரா தீனனென்னும்
　பழயவார்த்தை பொய்யாமோ
புத்திமுக்தி யளிக்கப்பரம
　புருஷனாய் அவதரித்தீரே. (உக)

இப்படியிருந்தா லெனதுபிள்ளையென்
　றெப்படிசொல்வா ரென்னவே
மைப்படிகண்ணினா ளுக்குவரந்தந்து
　மானிடக்குழந்தை யாயினரே. (உஉ)

பூசத்தினு மாயில்யத்திலும்
　பூவைகைகேசி சுமித்திரையும்
மாசறுமீன கடகத்திலொளி
　மயமாயொன்று மிரண்டும்பெற. (உங)

தாசரதிக ளவதரித்திட
　ஜாதகருமஞ் செய்துடனே
ஆசார்யனைக் கொண்டுமன்னவன்
　அமிர்தபுஞ்சமா யிருக்கும். (உச)

ராமபரத லக்ஷ்மணசத்ருக்ன
　நாமமந்திரந் தந்திடவே
சேஷமமளிக்கும் நாலுவேதங்களுஞ்
　சிறந்துவளரு வதைப்போலே. (உரு)

பொழுதொருவர்ணம் நாளொருமேனியாய்
　புத்திரர்நால்வரும் வளரவே
தழுவித்தழுவித் தந்தையுந்தாயரும்
　சந்தோஷங்கொண் டிருக்கையிலே. (உசு)

பாயசாறு சாரமாகப்
　பாலப்பருவ மாதியாய்
மாயனைலட்சும ணனுங்கைகேசி
　மகனைச் சத்துருக்கனுமாக. (உஎ)

அநவரதமு மநுசரித்திட
　அரசன்நாலு சுதருக்குள்ளே
எனதாண்டவ னிட்டதிலதிக
　இன்பமேவி யிருக்கையிலே. (உஅ)

ஒருநாளந்த மன்னவன்வழக்க
　முண்டானவகைப் பூஜித்து
திருவரங்கனுக்கு நைவேத்
　தியம்புரிந் துபசாரமாய். (௨௯)

இருகதவையுஞ் சாத்திவெளியி
　லிருந்துதிறந்துள் ளேகியே
மருவும்பதார்த் தங்கள்குறைந்த
　வாறுகண்டு மனமகிழ்ந்து. (௩0)

குருவசிஷ்டரைக் கேட்கநாளை
　கூறுவே னென்றவர்கூற
நிருபனதை மறுநாள்பார்க்க
　நீலவண்ண னுண்ணக்கண்டு. (௩௧)

ஆச்சரியங்கொண்டுள் வெளியிலும்
　ஆநந்தராமனைக் கண்டுடனே
மாச்சரிய மில்லாதவசிஷ்ட
　மாமுனிவனைக் கேட்கவே. (௩௨)

மேதினிபாரம் நீங்கவிதியும்
　விண்ணவருங்கூடி வேண்டவே
ஆதிமூலப் பொருளேராம
　னாகிவந்தது பாருமையா. (௩௩)

சோதிகோசலை நீருஞ்செய்த
　சுகுர்தராசி யாகவே
ஆதிமத்திய மந்தமில்லா
　னவதரித்தது பாருமையா. (௩௪)

சேயிழை கைகேசிசுமித்திரை
　தேவிகளிடத்திற் சங்கமும்
ஆயிரவாயரவுஞ் சக்கரமு
　மவதரித்தது பாருமையா. (௩௫)

என்றுவசிஷ்ட முனிவனிவ்வா
　றியம்பக்கேட்டு மன்னவன்தான்
அன்றடைந்திடும் ஆனந்தத்திற்கு
　மளவுண்டோபார் சங்கரியே. (௩௬)

பின்னொருநாளங் கணத்திலெம்
　பெருமான்விளை யாடிக்கொண்டு
பொன்னொரு கரத்தினிலிருக்கும்
　அபூபத்தொடு வரும்போது. (௩௭)

பொறுமைமிகுந்த ரோமமஹாரிஷி
　புகலுமுறையைச் சோதிக்க
மறுவில்லாத புசண்டாமாமுனி
　வாயசரூப னாகியே. (௩௮)

பக்ஷணத்தினி லாசைகொண்டு
பார்ப்பதுபோ லருகுவர
தக்ஷணமுனிவன் றனையெடுத்துத்
தாசரதி விழுங்கிடவே. (௩௯)

பலகால மிராமமூர்த்தி
பண்டியினுள்ளவன் திரிந்தும்
சிலநாழிகை போலக்காட்டித்
திரும்பமுனியை யுமிழவே. (௪௰)

புசண்டமாமுனி புன்னகைகொண்டு
போற்றும் புதுமையைப்பார்த்து
நிசமுரையுமென் றையனோத
நிர்மலமுனிவனுஞ் சிரித்து. (௪௧)

கண்டதெல்லாஞ்சொல்ல விதிலய
காலமளவும் போதுமோ
கொண்டல்வண்ணனே யாகிலுங்கொஞ்சங்
கூறுவேனென்று தொடங்கினான். (௪௨)

ஏழுகடலீ ரேழுபுவனம்
ஏழுசிரஞ்சீவி களையும்
வாழுமேழு ரிஷிகளையும்
வசுமநுக்களையும் பார்த்தேன். (௪௩)

மூவராகும் விதிபசுபதி
முகுந்த மூர்த்தியையுங்கண்டேன்
தேவர்களும் ராசரிஷிகள்
தேவரிஷிகளையுங் கண்டேன். (௪௪)

இந்திரனக்கினி வாயுகுபேரன்
எமன்வருணனையும் பார்த்தேன்
சந்திரர்சூரியர் குஜபுதகுரு
சனிகவிராகு கேதுக்களும். (௪௫)

கந்தருவகின்னர கிம்புருஷ
கருடாதிகளை யுங்கண்டேன்
நந்திவாரண முகன்குகனையும்
நாகராசரையும் பார்த்தேன். (௪௬)

பக்ஷிநரபசு தருமிருகாதி
பலவும்நால்வகைத் தோற்றமும்
குக்ஷியுளிருக்கக் கண்டேனையா
கோமானேசார்வ பூமானே. (௪௭)

இத்தனைகூடியதா மிவ்வண்டம்போல
எத்தனையோகண்ட தென்னசொல்வேன்
பத்தனையாளு மென்றுதுதித்து
பணிந்துமுனிவ னேகவே. (௪௮)

ஸத்துவகுண நிதியாம்பரதன்
சத்திரம்பிடிக்க லக்ஷ்மணனும்
சத்துருக்கனும் சாமரங்கள்வீச
ஜானகி சமேதனாய். (௪௯)

அங்கதனும் பதங்கதநயனும்
ஆஞ்சனேய விபீஷணரும்
தங்கும்வானர புங்கவர்களும்
ஜாம்பவான் முத லானவரும். (௫௦)

வந்திமாகத பிருந்தங்களும்சு
மந்திராதி மந்திரிகளும்
சந்தித்தாநந்தங் கொண்டெச்சரிக்கை
சாற்றிப்போற்றுஞ் சபையிலே. (௫௧)

மூர்த்தாபி ஷேகம்கொண்டு
முனிவர்தேவ ரியாவரும்
பார்த்தாநந்த மடையபூமி
பாலனஞ்செய்யும் காலத்திலே. (௫௨)

நித்தியானந்த னுத்தியான
நிலமேவியொரு நிசியிலே
சத்தியான ஜானகியோடு
தங்கமணி மயமாகும். (௫௩)

உப்பரிகையிற் சகலசம்பத்தும்
ஓங்குங்கோமள தேசத்திலே
செப்பரிய பரமசுகங்கொண்டு
சேர்ந்திருக்குஞ் சமயத்திலே, (௫௪)

இந்துதிகழ மயிலுங்குயிலும்
எதிரெதிராய்க் கூவவே
மந்தமாருத மலர்வாசனை
வகித்துவகித்து வீசவே. (௫௫)

அந்தவேளை யமரப்பெண்களும்
அரம்பைபெண்களும் அங்குவர
கொந்தளகமுறு மானவப்பெண்களும்
கூடிச்சோபனம் பாடினரே. (௫௬)

வசிஷ்டமுனியா னுபநீதனாய்
மருவுந்தம்பிய ரோடுகலை
விசிஷ்டமுஞ்சில நாளிற்கிரகித்த
விமலமூர்த்திக்குச் சோபனம். (௫௭)

காதிதநய ஞாதியசேதியால்
கண்டகிதாடகையை வதைத்து
கோதிலாது மகத்தைக்காத்த
கொண்டல் வண்ணனுக்குச்சோபனம். (௫௮)

திருவடி தூக ளாலேபிரம
தேவன்மக ளகலிகையை
ஒருநொடியிற் பாவனஞ்செய்த
உத்தமனுக்குச் சோபனம். (௫௯)

அடிபடும்போது ஓடமருவை
யாகுமென்றலம்பும் வேடனுக்கு
படியில்ஞான பாக்கியமீந்த
பரமனுக்குச் சோபனம். (௬௦)

மெய்தேகியென் றறிந்தஜனகன்
வில்லைலீலையா யொடித்து
வைதேகியை மணம்புரிந்த
மாதவனுக்குச் சோபனம். (௬௧)

வரும்வழியினிற் பரசுராமன்
மதத்தையடக்கச் சேனையுடன்
திருவயோத்தியில் வந்திருந்தநம்
சீதாபதிக்குச் சோபனம். (௬௨)

அன்னைவார்த்தை கொண்டுஜனகி
யநுஜரொடு வனமேக
தன்னையடுத்த குசனைக்காத்த
தாசரதிக்குச் சோபனம். (௬௩)

பரத்துவாச முநியைக்கண்டவர்
பரம்பரைக்கு மனுக்கிரகித்துத்
துரத்திக்காகா சுரனையாண்ட
சுமுகனுக்குச் சோபனம். (௬௪)

சித்திரகூட மருங்குவந்து
சேவித்திடும் பரதனுக்கு
பத்திரமாம் பாதுகைதந்த
பரிசுத்தனுக்குச் சோபனம். (௬௫)

வால்மீகமுனிவனு மத்திரி
மாமுநிவனும் பூசிக்க
மேன்மையா யனுக்கிரகித்தவேத
வேத்தியனுக்குச் சோபனம். (௬௬)

கரபங்ககரனும் விராதன்
துடித்துவிழ வதைத்துடனே
சரபங்கனுக்கு மோக்ஷமளித்த
சரண்யனுக்குச் சோபனம். (௬௭)

பனிகுலங்களைப் பானுமூர்த்தி
பறக்கச்செய்யும் வகைபோல
முனிகுலங்க ளிடரைத்தீர்த்த
மோகனனுக்குச் சோபனம். (௬௮)

அதிர்ஷ்டமிதென் ஞானந்தங்கொண்
டடிபணிந் தாராதிக்கும்
சுதிஷ்டமுனியை யடிமைகொண்ட
சோபனனுக்குச் சோபனம். (௬௯)

அகத்தியமா யகத்தியமுனி
யளித்தவில்லம் பங்கீகரித்து
ஜெகத்திலவனைச் சிறக்கச்செய்த
தேவபதிக்குச் சோபனம். (௭௦)

பஞ்சவடியிற் சூர்ப்பநகியை
பங்கஞ்செய்து கராதிகளாம்
வஞ்சகரைவதைத்து சயம்பெற்ற
மறைபொருளுக்குச் சோபனம். (௭௧)

அடாவென் றதட்டிராவணன்
அலறித்துடிக்கப் போராடும்
ஜடாயுவுக்கு மோக்ஷமளித்த
தயாநிதிக்குச் சோபனம். (௭௨)

நிபந்தனையா யிரண்டுயோசனை
நீண்டகையுட னேயிருந்த
கபந்தனுக்குஞ் சுபந்தந்தநம்
கண்மணிக்குச் சோபனம். (௭௩)

அபரிமிதாநந்த சுகத்தை
யநுபவிக்க வரங்கோரும்
சபரிக்கும் சாயுச்சியமளித்த
தத்பரனுக்குச் சோபனம். (௭௪)

தனுமான்களை யறிந்துவர
தபனதநய னேவவந்த
அனுமானையு மடிமைகொண்ட
ஆண்டவனுக்குச் சோபனம். (௭௫)

காலினாலேதுந் துபி யெலும்பை
கடத்திமரமேழுந் துளைத்து
வாலியையோ ரம்பினாலே
வதைத்தவனுக்குச் சோபனம். (௭௬)

வெட்கிநின்ற சுக்ரீவனுக்கு
விதம்விதமாய் போதித்து
கிஷ்கிந்தை நகரையளித்த
கீர்த்திமானுக்குச் சோபனம். (௭௭)

மங்களகுண சாலிவாலி
வார்த்தைபடித் தாரைமகிழ
அங்கதனுக்கெவ் வராச்சிய
மளித்தவனுக்குச் சோபனம். (௭௮)

பால்யமுதற் பக்திபண்ணும்
  பாக்கியம்பெற்ற தம்பியுடன்
மால்யவந்த பருவதத்தினில்
  வசித்தவனுக்குச் சோபனம். (௭௯)
மாருதியா லென தன்னை
  வசிக்குமிட மறிந்துகொண்டு
வாரிதியினை ரம்வந்த
  மாதவனுக்குச் சோபனம். (௮0)
தம்பியைப்போ லாதரித்து
  சரணடைந்த விபீஷணனும்
நம்பிக்கிலங்கை நகரையளித்த
  நல்லவனுக்குச் சோபனம். (௮௧)
உளமகிழ்ந்து வானரங்க
  ளோடிக்கொண்டு வந்தமலைகளால்
நளனைக்கொண்டு திருவணைகட்டிய
  நாயகனுக்குச் சோபனம். (௮௨)
இலங்கைநகரை வளைத்துக்கோதண்ட
  மேந்தியரக்க ராமிருளை
விலங்கச்செய்த தினகரகுல
  வீரனுக்குச் சோபனம். (௮௩)
அதிகாயன் கும்பகர்ணன்
  அகம்பனிந் திரசித்துடனே
மதிகெட்டரா வணனைச்சயித்த
  மஹானுக்குச் சோபனம். (௮௪)
அனலிற்குளித் தெழுந்திடுமெங்க
  ளன்னை ஜானகி மகிமையை
வனஜபவனு மரனும்துதிக்க
  மகிழ்ந்தவனுக்குச் சோபனம். (௮௫)
வீடணனுக்கு மகுடஞ்சூட்டி
  விமலபுஷ்பக மேறியே
மாடமாளிகை சூழயோத்தி
  வந்தவனுக்குச் சோபனம். (௮௬)
மிகுங்களியொடு சிங்காதன
  மேவிதிரு சமேதனாய்
மகுடம்புனைந் துலகையாளும்
  மங்களனுக்குச் சோபனம். (௮௭)
மன்னரும்வான ரருஞ்சுரரும்
  மாமுநிவரும் யோகிகளும்
சின்னசாமியு மென்றம்பணியும்
  சின்மயனுக்குச் சோபனம். (௮௮)

ஸ்ரீ ராமதாஸ்சரித்திரக் கீர்த்தனைகள் - முற்றிற்று.

85566